# ஜவீரல் ரேகை சாஸ்திரம்

Cell: 9489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

சூசை ராஜா

அறிவாலயம்
30-A, லாங்ஸ் கார்டன்
சென்னை—2

முதற் பதிப்பு
உரிமை பதிப்பகத்திற்கே

ராஜம் பிரிண்டர்ஸ், சென்னை-5

# முன்னுரை

உள்ளங்கை ரேகைகளைக் கொண்டு ஒருவரின் வாழ்க்கை நிலையை நிர்ணயித்துக் கூறும் வழி முறைகளைக் கூறும் நூலுக்கு "ரேகை சாஸ்திரம்" என்று கூறப்படுகிறது.

இந்தப் பழக்கம் எப்போது ஆரம்பமானது என்பதை அறுதியிட்டுக் கூற எவரும் முன்வரவில்லை. இந்த ரேகை சாஸ்திரத்தை முதன் முதலில் கண்டு பிடித்தவர் யார் என்பதைப் பற்றி இதுவரை எந்த சாஸ்திரத்திலும் தெளிவாகக் கூறப்படவில்லை.

எனவே, ஆயிரம் ஆயிரம் வருடங்களுக்கு முன்பே இந்த ரேகை சாஸ்திரம் தோன்றியிருக்கவேண்டும்.

அதன் பின்னர் தோன்றிய அறிவாளிகள் அதினின்றும் பல விஷயங்களை அநுபவப் பூர்வமாக அறிந்து, தேவையானவற்றைக் கூட்டியும், தேவையற்றதை விலக்கியும் பல சாஸ்திர புஸ்தகங்களை எழுதியிருக்கின்றனர்.

கையின் அமைப்பைப் பற்றியும், கைவிரல்களின் அமைப்பைப் பற்றியும், உள்ளங்கை ரேகைகளைப் பற்றியும் தான் ரேகை சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால், பெருவிரல் ரேகை, மற்ற விரல்களின் ரேகை இவைகளைப் பற்றி ஒரு சிலரே குறிப்பிட்டிருக்கின்றனர்.

பொதுவாக பெருவிரல் ரேகையை முக்கியமாக வைத்து பல நூல்கள் வெளிவந்துள்ளன.

பெருவிரல் ரேகைகளை ஆராய்ச்சி செய்யும் ஸ்தாபனங்கள் மேனாட்டில் ஏராளமாக இருக்கின்றன. பெருவிரல் ரேகைகளைப் பற்றிய ஆங்கில நூல்கள் ஏராளமாக இருக்கின்றன.

இந்த வகையில் ஐந்து விரல்களிலும் உள்ள ரேகைகளைக் கொண்டு ஒரு மனிதனின் வாழ்க்கை நிலையை நிர்ணயிக்க சென்ற பல ஆண்டுகளாக நான் அரும் பெரும் ஆராய்ச்சி செய்து, பல உண்மைகளை அறிந்து அவற்றைக் குறித்துவைத்து, அவைகளைக் கொண்டு இந்த ஐவிரல் ரேகை சாஸ்திரம் என்ற நூலை எழுதியுள்ளேன்.

என் ஆராய்ச்சிக்கு எட்டியவற்றை மட்டும் இதில் எழுதியிருக்கிறேன். இன்னும் பல விஷயங்களை அறிந்து, அவைகளை எல்லாம் அடுத்துவரும் பதிப்புகளில் சேர்க்க உத்தேசித்திருக்கிறேன்.

இந்த புஸ்தகத்தை எழுத எனக்கு ஊக்கமளித்து இதை நல்ல முறையிலே வெளியிட்ட அறிவாலயத்தாருக்கு என் நன்றி உரித்தாகுக.

எஸ். ஏ. எஸ். ராஜா.

# ஐவிரல் ரேகை சாஸ்திரம்

நமது உள்ளங்கைகளில் ரேகைகள் தென்படுவது போல, நமது கைகளிலுள்ள பத்து விரல்களிலும் கூட நூற்றுக் கணக்கான ரேகைகள் உள்ளன. அவைகளில் எல்லா ரேகைகளையும் விட விரலின் முதல் அங்குல பாகத்திலுள்ள ரேகைகளையே முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

விரல் நுனியிலிருந்து முதல் அங்குல பாகத்தில், விரலின் கீழ் பக்கமாகக் கவனித்தால் அதில் சுற்று ரேகை, சுழி ரேகை, சரிவு ரேகை, நீளச் சுழி ரேகை, இரட்டைச் சுழி ரேகை, ஒத்தைக்கோட்டு ரேகை என்று பலவிதமான ரேகை அமைந்திருப்பதைக் காணலாம்.

இந்த ரேகைகளைப் பற்றி பின்னால் விளக்குவோம்.

இந்த ரேகை அமைப்பு எல்லோர் கையிலும் ஒரே விதமாக இருப்பதில்லை. சிலருக்கு மட்டும் பெருவிரலிலுள்ள ரேகை அமைப்பைப் போல மற்ற நான்கு விரல்களிலும் அமைந்திருக்கும். சிலருக்கு பெருவிரலில் உள்ள ரேகை போல ஒன்றிரண்டு விரல்களிலும் மற்ற விரல்களில் வேறு விதமான ரேகைகளும் அமைந்திருக்கும்.

சிலரது விரல்களில் ஐந்து விரல்களிலும் ஐந்து விதமான ரேகை அமைந்திருக்கும்.

இந்த ரேகை அமைப்புக்கு ஏற்றபடி அவர்களின் வாழ்க்கை நிலையிலும் மாற்றமிருக்கும். எந்த விதமான ரேகை அமைப்பு இருந்தால் அவர்கள் வாழ்க்கை நிலை உயர்ந்திருக்கும், எந்த விதமான ரேகை அமைப்பு இருந்தால் அவர்கள் வாழ்க்கை நிலை தாழ்ந்திருக்கும் என்ற விபரததை அறிய வேண்டுமானால், ஒவ்வொரு விரலிலுமுள்ள ரேகை அமைப்பை வெகு துள்ளிதமாகக் கவனித்து அறியவேண்டும்.


முதலில் எத்தனை வகையான ரேகை அமைப்புகள் உண்டு, அவைகளின் வடிவம் எப்படி இருக்கும் என்பதை விளக்கி விட்டு மேற்செல்வோம்.

பொதுவாக பெருவிரல் ரேகையாராய்ச்சி நிபுணர்கள் 2000-க்கும் மேற்பட்ட ரேகை அமைப்பு உண்டு என்று கூறுகின்றனர். அவைகளில் அதிகமாகக் காணக்கூடிய ரேகை அமைப்பு 160-தேயாகும்.

இந்த 160 வகையான ரேகை அமைப்புகளிலும் அதிகமாகக் காணக்கூடிய ரேகை அமைப்பு 16 தான். தென்னாட்டைப் பொறுத்த அளவில் இந்த 16 விதமான ரேகை அமைப்பையே அதிகமாகக் காணமுடிகிறது. ஏதோ ஆயிரத்தில் ஒன்று என்ற கணக்கில் மற்ற பல ரேகை அமைப்புகளையும் காண முடியும்.

இந்த 16 விதமான ரேகை அமைப்பை வைத்துத் தான் இந்த ஐவிரல் ரேகை சாஸ்திரம் எழுதப் பட்டிருக்கிறது.






ரேகைகளின் விளக்கம்

A. இந்த ரேகையைக் கவனியுங்கள். இதன் நடுவில் எந்த விதமான சுழியும் தென்படாது. இந்த A என்ற ரேகை அமைப்பு வெறும் ஒற்றைக்

கோடுகள் கொண்டவை. இதில் வரிவரியாக ஒற்றைக் கோடுகள் மட்டுமே தென்படும்.

B. இந்த ரேகை அமைப்பைக் கவனியுங்கள். இந்த ரேகை அமைப்பு A ரேகை அமைப்பைப் போலவே இருந்தாலும் நடுபாகத்தில் ஒரு சிறிய நாக்கு போன்ற ஒரு ரேகை தென்படும்.

C. இந்த ரேகை அமைப்பைக் கவனியுங்கள். இதன் நடுவில் நாக்கு போன்ற ஒரு சிறிய இரட்டை ரேகை தென்படும். அதன் மேல் அதைச் சுற்றி ஒரு சரிவு ரேகை தென்படும். பிறகு அதன் மேல் அதே போன்ற ஒரு சரிவு ரேகை தென்படும். இப்படியாக அடுக்கடுக்கான ரேகை ஒன்றன் மேல் ஒன்ருக வந்தாலும், அவைகளின் நுனிபாகம் மட்டும் வலது பக்கமாகவே வந்து முடிவடையும். இந்த ரேகை அடுக்கின் கடைசி ரேகை வளைவிற்கு அடுத்து ஒரு டெல்ட்டா என்னும் திட்டு தோன்றும். அதாவது சூலம் போன்ற ஒரு சிறிய ரேகைக் குறியும் தென்படும்.

D. இந்த ரேகை அமைப்பைக் கவனியுங்கள். இது மேலே சொல்லப்பட்ட ரேகை அமைப்பைப் போலவே தென்படும். ஆனுல், நடுவில் மல்லிகை மொக்கு போன்ற ஒரு ரேகை அடையாளம் தோன்றி, அதன் மேல் அடுக்கடுக்காக ஒற்றை ரேகைகள் பதிந்திருக்கும்.

E. இந்த ரேகை அமைப்பைக் கவனித்துப் பாருங்கள். வட்ட வட்டமான ரேகைகள் சுற்றிச் சுற்றி வந்தாலும் நடுவில் ஒரு எள் போன்ற ரேகைக் குறி தென்படும். இந்த எள் போன்ற பாகமும் சற்று வலப்புறம் சாய்ந்த நிலையில் தென்படும்.



F. இந்த ரேகை அமைப்பைக் கவனியுங்கள். இதுவும் வட்ட வட்டமாக சுற்றிவரும் ரேகைபோல் தென் பட்டாலும் கூட நடுவில் ஒரு அரிசி போன்ற உருவம் தென்படும்.

G. இந்த ரேகை அமைப்பைக் கவனியுங்கள். இது மேலே சொல்லப்பட்டது போன்ற சுற்று ரேகை போன்ற அமைப்பைக் கொண்டிருந்தாலும் மையத்திலுள்ள அரிசி போன்ற பாகம் வலது பக்கமாக சாய்ந்த நிலையில் தென்படும்.

H. இந்த ரேகை அமைப்பைக் கவனியுங்கள். இதுவும் சுற்றிச் சுற்றி வரும் ரேகை அமைப்பு போல் தோன்றினுலும் இதன் நடுவில் ஒரு கடுகு போன்ற சிறிய சுழி மட்டுமே தென்படும்.

I. இந்த ரேகை அமைப்பைக் கவனியுங்கள். இதுவும் சுற்றிச் சுற்றி வரும் சுற்று ரேகை அமைப்புதான். ஆனுல் மேலே சொல்லப்பட்ட ரேகை வட்ட வட்டமாகத் தென்படும். இந்த ரேகை அமைப்பு கோழி முட்டை வடிவத்திலிருக்கும்.

J. இந்த ரேகை அமைப்பைக் கவனியுங்கள். இந்த ரேகையும் சுற்றிச் சுற்றி சுற்று ரேகை போலத் தென்பட்டாலும், இதன் நடுவில் ஒரு இரட்டைச் சுழி தென்படும். இந்த இரட்டைச் சுழியும் அகல விரிந்ததாகவும் அதைச் சுற்றிப் பல வட்ட ரேகை களும் சூழ்ந்திருக்கும்.

இந்த ரேகை அமைப்பைக் கவனியுங்கள். இதுவும் ஒரு சுற்று ரேகை அமைப்பு தான். மேலே சொன்னது போல இடையில் ஒரு இரட்டைச் சுழி

யுடன் இருக்கிறது. ஆனுல் இந்த இரட்டைச் சுழி மிகமிகச் சிறியதாக ஒரு கடுகைவிட சற்று பருமனுகத் தென்படும்.

L. இந்த ரேகையைக் கவனித்துப் பாருங்கள். இந்த ரேகை அமைப்பு தனிப்பட்டதாக இருக்கும். நடு பாகத்தில் கோபுரம் போன்ற ஒரு ரேகை உயர்ந்து நிற்க அதையடுத்து பல ரேகைகள் அது போலவே அதை ஒட்டி உயர்ந்து போய் மறுபடி கீழே இறங்கிய நிலையில் தென்படும்.

M. இந்த ரேகை அமைப்பைக் கவனித்துப் பாருங்கள். இதன் நடுவில் நெற்கதிர் போன்ற ஒரு ரேகை அமைப்பு தென்படும். இது சிலருக்குச் சிறிய தாகவும் சிலருக்கு பெரிய அளவிலும் பதிந்திருக்கும்.

இப்போது 16 விதமான ரேகைகளைப்பற்றி அறிந்துக் கொண்டீர்கள். ஆனுல், இந்த 16 விதமான ரேகை அடையாளங்களை வைத்து, ஐவிரல் ரேகைகளுக் கும் பலன் கூறுவதற்கு சுலபமான வழி ஒன்று இருக்கிறது. அதாவது, சுற்றுச் சுழியுள்ள ரேகைகளை ஒரு பகுதியாகவும், சரிவு ரேகைகளை ஒரு பகுதியாகவும் பிரித்து விட வேண்டும். இவ்விதம் பிரிக்கும்பொழுது, சுற்றுச் சுழி ரேகைகளின் நடுவிலுள்ள அமைப்புகளை யும், சரிவு ரேகைகளின் நடுவிலுள்ள அமைப்புகளையும் விட்டுவிட வேண்டும்.

எடுக்கப்பட்ட ரேகைப் பதிவில் இருப்பது சுற்றுச் சுழியா, சரிவு ரேகையா என்பதை மட்டும் தான் கவனிக்க வேண்டும். இதை விளக்க கீழே சில எழுத்து கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைக் கொண்டு



எது சுற்றுச் சுழி ரேகை, எது சரிவு ரேகை என்பதை அறிந்துக் கொள்ளலாம்.

N. இது ஒரு சுற்று ரேகை போல தென்பட்டாலும் இதன் நடுவில் கவனித்தால் வேறுபாடு நன்ருகத் தெரியும். இதன் நடுவில் ஒரு பனை ஓலை விசிறியின் நடுவிலுள்ள ஓலைக் கூட்டம் போல கூர்கள் வந்து சேர்ந்திருக்கும். பொதுவாக இதன் அமைப்பு ஒரு பனை ஓலை விசிறி போலவே இருக்கும்.

O. இந்த ரேகை அமைப்பைக் கவனியுங்கள். இது ஒரு சுற்று ரேகை போலவே தென்படும். ஆனுல் இடையில் இரட்டைச் சுழி இருக்கும். இந்த இரட்டைச் சுழியும் ஒரே அளவில் ஒரே சமமாக, அதோடு ஒரு சிறிய வட்டம் போல தென்படும். J என்ற ரேகை அமைப்பைப் போலவேதான் இருக்கும். ஆனுல் சிறிய அளவில் இரட்டைச் சுழி வட்டமாகத் தென்படும்.

P. இந்த ரேகை அமைப்பைக் கவனித்துப் பாருங்கள். இதுவும் ஒரு சுற்று ரேகை தான். ஆனுல், இந்த சுற்று வெகுச்சிறியதாக இருக்கும். அதாவது ஒரு துவரம் பருப்பின் அளவிலேயே சுழி அடங்கி விடும். அதன் இருபுறமும் டெல்ட்டா என்ற திட்டுகள் தென்படும்.

| சுற்றுச் சுழி ரேகைகள். | சரிவு ரேகைகள் |
| --- | --- |
| E | A |
| F | B |
| G | C |
| H | D |
| I | L |

J
K
M
O
P

இவைகளுக்கு அடையாள எழுத்து, ''சு'' இவைகளுக்கு அடையாள எழுத்து. ''ச''

இப்போது இந்த 16 விதமான ரேகை அமைப்புகளைத் தெரிந்துக் கொண்டீர்கள். இவைகளை மனதில் வைத்து, சுழிகளைத் துள்ளிதமாகக் கண்டு பிடித்து எடுக்க வேண்டும்.

## ரேகைப் பதிவு எடுப்பது எப்படி?

ரேகைப்பதிவு தெளிவாக இருந்தால்தான் அதற்கான பலனை அறிய முடியும்.

முதலில், சுமார் ஐந்தங்குல அகலம் எட்டங்குல நீளம் உள்ள வெள்ளைத் துண்டுக் காகிதங்களைத் தயார் செய்துக்கொள்ள வேண்டும்.

சற்று கனத்த சுத்தமான கண்ணாடித்துண்டு ஒன்று சுமார் ஐந்தங்குல அகலம் எட்டங்குல நீளம் உள்ளதாக தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அச்சாபீஸ்களில் அச்சடிக்க உபயோகப்படுத்தும் உயர்தரமான கருப்பு மை கொஞ்சம் வாங்கி வந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த கருப்பு மையை ஒரு சிறிய வாயகன்ற டப்பாவில் போட்டு வைத்துக் கொள்ளவேண்டும்.

மேலே சொன்ன கண்ணாடித் துண்டை அது கொள்ளக் கூடிய அளவிலுள்ள ஒரு மரப்பெட்டியிலோ, ஒரு தகர டப்பாவிலோ வைத்துக்கொள்ள வேண்டும்.



ரேகைப்பதிவு எடுக்க வேண்டுமானால் கொஞ்சம் கருப்புமையை எடுத்து கண்ணாடித் துண்டின் மேல் மெல்லியதாகத் தடவவேண்டும்.

வேறொரு கண்ணாடித்துண்டு பலகை அல்லது அட்டையின் மேல் ஒரு வெள்ளைக் காகிதத்துண்டை வைத்து விட்டு, ரேகைப்பதிவு எடுக்க வேண்டியவருடைய வலது கை விரல்களை மை தடவப்பட்ட கண்ணாடியின் மேல் ஒழுங்காக வைத்து, விரலைச் சற்று உருட்டினால் போலச் செய்து விடவேண்டும். இந்த சமயம் நான்கு விரல்கள் மட்டும்தான் நன்றாகப் பதியும்.

முதலில் நான்கு விரல்களுக்கும் மை ஒத்தி எடுத்தவுடன் அந்த விரல்களை வெள்ளைக் காகிதத் துண்டின் மேல் அசையாமல் அப்படியே வைத்து, ஒவ்வொரு விரலாக பக்க வாட்டில் இடம் வலமாகச் சற்று உருட்டி விடவேண்டும்.

பிறகு, விரல்களை எடுத்துவிட்டு ரேகைப் பதிவைக் கவனிக்க வேண்டும். ரேகைப்பதிவு நன்றாகத் தென் படக் கூடிய அளவில் இருக்க வேண்டும். அதிக மை ஒத்தியதின் காரணமாக ரேகைப்பதிவு ஒரே கருப்பாக மொத்தையாக இருந்தாலும், அதிக மை படாமல் ரேகைப்பதிவு தென்படாத நிலையில் இருந்தாலும், அந்த ரேகைப்பதிவை வைத்து விட்டு மறுபடி மை ஒத்தி மற்றொரு ரேகைப்பதிவு எடுக்க வேண்டும். சில சமயம் பல ரேகைப்பதிவு எடுக்க வேண்டியதாகயிருக்கும். எத்தனை ரேகைப்பதிவு எடுத்தாலும், அதில் சுத்தமாகத் தென்படும் ஒரு ரேகைப் பதிவுத்தானை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த விதமாக சுத்தமாக ரேகைப்பதிவு எடுத்த பின், பெருவிரலை மையில் ஒத்தி எடுத்து, ரேகைப்

பதிவு எடுக்கப்பட்ட காகிதத்தின் வலது பக்கமாக காலியாகவுள்ள இடத்தில் பெருவிரலை வைத்து அழுத்தி பெருவிரலின் ரேகையைப் பதிவு செய்ய வேண்டும். இந்த ரேகையையும் சுத்தமாகப் பதிவு செய்யவேண்டும்.

வெள்ளைக் காகிதத்தில் இந்த ஐந்து விரல் ரேகைகளையும் பதிவு செய்த பின் மை தடவிய கண்ணாடியை அதன் பெட்டியினுள் வைத்து மூடி ஜாக்கிரதையாக வைத்து விட வேண்டும்.

பிறகு, ரேகைப்பதிவு கொடுத்தவருடைய பெயர், விலாசம், வயது, தேதி இவைகளை அந்த ரேகைப்பதிவு எடுத்த காகிதத்தின் பின்பக்கம் சுத்தமாக எழுதிவிட வேண்டும்.

அதன் பிறகு, ரேகைப்படங்களை வைத்துக் கொண்டு முதலில் பெருவிரல் எந்த வகையான ரேகை அமைப்புடனிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அந்த ரேகைப் பதிவிற்குக் கீழ் அந்த ரேகையைக் குறிக்கும் அடையாளமான, "சு" "ச" என்ற ஒரு எழுத்தை எழுதிவிட வேண்டும்.

பிறகு ஆள்காட்டி விரலின் ரேகைப் பதிவைக் கவனிக்க வேண்டும். அந்த ரேகை எந்த விதமான அமைப்பு என்பதைக் கண்டுபிடித்து அதற்கான அடையாளமான சு—ச என்ற எழுத்து அடையாளத்தை அதனடியில் குறித்துவிட வேண்டும்.

இந்த விதமாக ஐந்து விரல் ரேகைப் பதிவையும் கவனித்து ஐந்து விதமான ரேகை அமைப்புகளின் அடையாள எழுத்துக்களையும் எழுதிவிட வேண்டும்.



## ஐவிரல் ரேகைக்குப் பலன் கண்டு பிடிக்கும் விதம்

அதன் பின் ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து அதன் தலைப்பில் ரேகைப்பதிவுக் காகிதத்தில் ரேகைப் பதிவுக்கு குறிக்கப்பட்ட அடையாள எழுத்தை வரிசையாக எழுதிக்கொள்ள வேண்டும்.

அதாவது இவ்விதமாக, சு-ச-ச-சு-சு
என்று எழுதிக்கொள்ள வேண்டும்.

பிறகு, அதன் கீழ் ரேகைப்பதிவு கொடுத்தவருடைய பெயர், வயது, விலாசம் இவைகளையும் எழுத வேண்டும்.

அதிகமான ரேகைப்பதிவுகள் தொடர்ந்து வருவதாக இருந்தால், ஒரு தனி புஸ்தகம் வைத்துக் கொண்டு, ரேகைப்பதிவு கொடுப்பவருடைய பெயர், வயது, விலாசம் இவைகளைக் குறித்து வந்தால் இது பல வகைக்கு உதவியாக இருக்கும்.

இவ்விதம் எழுதிவரும் பொழுது ஆரம்பமுதல் தொடர் எண் வரிசையும் போட்டு வந்தால், ரேகைப் பதிவு எடுத்த காகிதத்தில் பெயர், வயது மற்றும் விபரம் எழுத தேவையில்லை. இந்த தொடர் எண்ணை மட்டும் அதில் குறித்துக் கொண்டால் போதும். தேவையானபோது தொடர் எண்ணைக் கொண்டு அந்த ரேகைப்பதிவு கொடுத்தவரின் பெயர், மற்ற விபரத்தை அறிந்துக் கொள்ளலாம்.

இந்த விதமாக ரேகைப் பதிவுத் தாளைத் தயார் செய்துக் கொண்ட பிறகு, இந்தத்தாளை வைத்துக் கொண்டு பின் பகுதியில் குறிக்கப்பட்டிருக்கும் எழுத்துப் பட்டியலைக் கவனித்து எது இதே போல சரிக்குச் சரியாக இருக்கிறதோ அந்த எழுத்து வரிசை

யின் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணை இந்தத் தாளில் ஒருபக்கம் குறித்துக் கொண்டு, "ஐவிரல் ரேகைக்குப் பலன்" என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் பலன்களைத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

ரேகைதாரருக்கு இதை அப்படியே எழுதியும் கொடுக்கலாம்.

இந்த விதமாக ரேகைப்பதிவு எடுத்து, அதை நன்ருகக் கவனித்து, அது எந்த வகையான ரேகை என்பதை அறிந்து அதனடியில் குறிப்பு எழுத்தை எழுத வேண்டும்.

குறிப்பு எழுத்து எழுதிய தாளைக்கொண்டு, ரேகைப் பலனைக் கண்டு பிடிக்கும் போது அவசரமின்றி சரிபார்க்க வேண்டும். இந்த வகையில் தவறு ஏற்பட்டால், பலனை சரிவர அறிய முடியாது. ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாகி விடும்.

## பலன் அறிய முதல் வழி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ச | ச | ச | ச | 1 |
| ச | ச | ச | சு | ச | 2 |
| ச | ச | ச | ச | சு | 3 |
| ச | ச | ச | சு | சு | 4 |
| சு | ச | ச | ச | ச | 5 |
| சு | ச | ச | சு | ச | 6 |
| சு | ச | ச | ச | சு | 7 |
| சு | ச | ச | சு | சு | 8 |
| ச | சு | ச | ச | ச | 9 |
| ச | சு | ச | சு | ச | 10 |
| ச | சு | ச | ச | சு | 11 |
| ச | சு | ச | சு | சு | 12 |
| சு | சு | ச | ச | ச | 13 |
| சு | சு | ச | சு | ச | 14 |
| சு | சு | ச | ச | சு | 15 |
| சு | சு | ச | சு | சு | 16 |
| ச | ச | சு | ச | ச | 17 |
| ச | ச | சு | சு | ச | 18 |
| ச | ச | சு | ச | சு | 19 |
| ச | ச | சு | சு | சு | 20 |
| சு | ச | சு | ச | ச | 21 |
| சு | ச | சு | சு | ச | 22 |
| சு | ச | சு | ச | சு | 23 |
| சு | ச | சு | சு | சு | 24 |
| ச | சு | சு | ச | ச | 25 |
| ச | சு | சு | சு | ச | 26 |
| ச | சு | சு | ச | சு | 27 |
| ச | சு | சு | சு | சு | 28 |
| சு | சு | சு | ச | ச | 29 |
| சு | சு | சு | சு | ச | 30 |
| சு | சு | சு | ச | சு | 31 |
| சு | சு | சு | சு | சு | 32 |



ரேகைப்பதிவில் எந்த வகையான ரேகை என்பதைக் கண்டறிந்து, அதைக் குறித்துக் கொண்ட தாளை வைத்து மேலே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்கு எழுத்து சரியாக உள்ள வரிசையில் கடைசியாகக் கொடுக்கப்பட்டுள்ள எண்ணைக் கொண்டு பின்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள ரேகைப் பலனை அறிந்துக் கொள்ளலாம்.

## எண்—1 ச-ச-ச-ச-ச

இந்த விதமான ரேகை அமைப்பு உள்ளவர்கள் ஆயிரத்தில் ஒருவராகத்தான் இருக்க முடியும் என்று

மேனாட்டு ரேகை நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், இந்த விதமான ரேகை அமைப்பு உள்ளவர்கள் நூற்றுக்கு நான்கு பேர் நம் நாட்டிலிருக்கின்றனர்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்களின் வாழ்க்கை நிலை ஒரு சாதாரண நிலையில் தான் இருக்கும். உயர்ந்த நிலைக்குப் போகவோ, தாழ்ந்த நிலைக்கு இறங்கவோ முடியாது ஆனால், சம நிலையில் துன்பமும் இன்பமும் கலந்த வாழ்க்கையாக இருக்கும்.

இவர்கள் அதிக அளவில் சம்பாதிக்கவும் முடியாது. சம்பாதிக்க முயற்சியும் எடுக்கமாட்டார்கள். இவர்கள் பலருடன் கலந்து வாழவே விரும்புவார்கள். இவர்களுக்கு பல நண்பர்கள் இருப்பார்கள். இவர்கள் வீண் காரியங்களில் பிரவேசித்து நேரத்தை வீணாக்க மாட்டார்கள். பிரயோஜனமான எந்தக் காரியத்தையும் மேற்கொண்டு அதை நல்ல முறையிலே முடிக்க பிரயாசை எடுப்பார்கள். இவர்கள் மிகவும் சிக்கனக்காரராகவும், வீண் சிலவு செய்ய மனமில்லாதவராகவும் இருப்பார்கள். இவர்கள் எதையும் மறைவின்றி கூறி விடுவார்கள்.

பிறருக்கு வணங்கி நடக்கக் கூடியவர்களாக இருப்பார்கள் தற்பெருமை இருக்காது. இவர்கள் பிறரை மதித்து நடக்கக் கூடியவர்களாக இருப்பார். தன்னை உயர்த்திப் பேச மாட்டார்கள்.

இவர்களுக்குக் கல்வி விஷயத்தில் முன்னேற்றம் இருக்கும். நல்ல ஞாபக சக்தி இருக்கும். கணக்கு, பூகோளம், வானசாஸ்திரம் விஞ்ஞானம், பூகர்ப்ப சாஸ்திரம், சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சி இவைகளில் நல்ல தேர்ச்சி உண்டாகும்.



இவர்கள் அநேகமாக உபாத்தியாயராகவும், பல சாஸ்திரம், விஞ்ஞானம் பற்றி பிறருக்கு உபதேசிக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்களுக்கு வியாபார சம்பந்தமான எந்தக் காரியமும் முன்னேற்றத்தைக் கொடுக்காது.

இவர்கள் தன் பின்பகுதியில் பிறரால் போற்றப் படக்கூடிய பல காரியங்களைச் சாதிக்கக் கூடியவராக இருப்பார்கள்.

இவர்கள் தன் வாழ்நாளில் பல இடம் மாறக் கூடியவர்களாகவும், வெளி நாடு சென்று திரும்பக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் எங்கு சென்றாலும் தன் பெற்றோர்களையும், உடன் பிறந்தோரையும் மறவாது அவர்களுடன் சம்பந்தப்பட்ட நிலையிலேயே வாழ்வார்கள்.

இவர்கள் தன் வாழ்நாளில் பல வகையான கஷ்டநஷ்டங்களை அடைந்தாலும் தன் சிலவுக்கு ஏற்ற பணம் கிடைக்காமல் கஷ்டப்பட்டாலும் தன் தொழில் முறை சம்பந்தப்பட்ட வகையில் தொடர்ந்து ஈடுபட்டு வருவார்கள். சோர்வடைய மாட்டார்கள்.

இவர்கள் தங்கள் மனதைக் கட்டுப்படுத்தி மனச் சமாதானமடைந்துக் கொள்ளும் வழி வகைகளை அறிந்திருப்பார்கள்.

பொதுவாக இவர்கள் வாழ்க்கை நடுத்தரமானதாகவே இருக்கும். ஆனால், வறுமையில் வாடாது.

இவர்களுக்கு அடிக்கடி ஜீரண சம்பந்தமான உறுப்புகளில் ஏதாவது கோளாறு ஏற்பட்டு, வயிற்று வலி, அஜீரணம் போன்ற வகையில் உபாதை

ஏற்படும். ஆனுல், ஒன்றிரண்டு நாட்களில் குணமாகி விடும். தொடர்ந்து தொல்லை தராது.

இந்த ரேகைதாரருடைய பெயருக்கு ஏற்றபடி எந்த மாதம் எந்த தேதி இவருக்கு நன்மை தரக் கூடியதாக இருக்கும். இவருக்கு எந்த நிறமான ஆடை, இரத்தினக்கல் பொறுத்தமானதாக இருக்கும் என்பதை இந்தப் புஸ்தகத்தின் கடைசியில் காணலாம்.

## எண்—2 ச-ச-ச-சு-ச

இந்த ரேகைப் பதிவில் முதல் மூன்று விரல்களிலும் சரிவு ரேகையும் நான்காவது விரலில் சுற்று ரேகையும் ஐந்தாவது விரலில் சரிவு ரேகையும் இருக்கும்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் எப்பொழுதும் அடக்கமான குணமுள்ளவர்களாக இருப்பார்கள். சாந்த குணமுள்ளவர்களாக இருப்பார்கள். பிறருடன் பேசும் பொழுது மரியாதயுடனும் வணக்கத்துடனும் பேசுவார்கள். அனுவசியமாக பேச்சுகளை இவர்களிடம் கேட்க முடியாது. எந்த விஷயத்திலும் அளவுடன் இருப்பார்கள். இவர்கள் பெருந்தன்மையோடு வாழக் கூடியவர்களாக இருப்பார்கள். இவர்கள் அநேகமாக தன் மனதிற்கு ஏற்ற ஒரு பெண்ணை காதலித்து மணமுடிக்கக் கூடியவர்களாகவே இருப்பார்கள்.

இவர்களுக்கு வாய்க்கக் கூடிய பெண் அழகுள்ளவளாகவும், குழந்தைகளிடம் அதிக பாசமுள்ளவளாகவும், குடும்பப் பொறுப்பைத் தாங்கி சற்றும் கோணுது,



கணவனுக்கும், பெரியோர்களுக்கும் அடங்கி நடக்கக் கூடியவளாகவும், பிறர் போற்றும் குடும்பவதியாகவும் இருப்பாள் இவர்கள் தங்கள் கல்வி விஷயத்தில் மேல் போக முடியாது. ஓரளவுதான் கல்வி கற்க முடியும்.

இவர்கள் தொழில் முறை கஷ்டப்பட்டு உழைக்கக் கூடியதாக இருக்காது. சுலபமான தொழில் முறை மூலம் வருமானம் அடையக் கூடியவராக இருப்பார்கள்.

இவர்கள் வருமானம் இவர்கள் வாழ்க்கைச் சிலவுக்குத் தேவையான அளவு தங்கு தடையின்றி கிடைத்து வரும்.

இவர்கள் வாழ்க்கையில் இடை இடையே ஏற்படும் சில சங்கடங்கள் தவிற வேறு வகையில் எவ்விதக் கஷ்டத்தையும் அநுபவிக்க மாட்டார்கள்.

இவர்களுடைய வயது காலத்தில் இவர்களுக்கு பாரிச வாய்வு, இரத்தாசய சம்பந்தமான வியாதிகள் தோன்றும். தோல் சம்பந்மமான சில வியாதிகளும் தோன்றி மறையும். ஆனுல் எந்த வகையிலும் கஷ்டம் உண்டாகாது.

இவர்களுடைய பெயரைக் கொண்டு இவர்களுக்கு வெற்றிதரும் மாதம் தேதி எவை என்பதையும், எந்த நிறமான ஆடை அணிய வேண்டும், எந்தவிதமான இரத்தினக்கல் அணிந்தால் முன்னேற்றத்தைத்தரும் என்ற விபரத்தை இந்தப் புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.

## எண்—3 ச-ச-ச-ச-சு

பெருவிரல் ரேகையில் சரிவு ரேகையும், ஆள்காட்டி விரல், மூன்ருவது நான்காவது விரலிலும் சரிவு ரேகை,

சுண்டு விரலில் மட்டும் சுற்று ரேகை இருக்குமானால், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர்களாயிருப்பார்கள். எதையும் மறைத்துப் பேசத் தெரியாதவர்கள். வஞ்சகம், சூது, வாது, அறியாதவர்கள்.

பேசும்பொழுது சப்தமாகப் பேசுவார்கள். சப்தமாகச் சிரிப்பார்கள்.

இவர்கள் எப்பொழுதும் சோம்பலையே விரும்புவார்கள். சுலபமான காரியங்களை மட்டும் எடுத்துக் கொண்டு கடினமான வேலைகளை விட்டுவிடுவார்கள்.

இவர்கள் எந்த வேலையிலும் அக்கரை காட்டமாட்டார்கள். எதிலும் சிரத்தையின்றி இருப்பார்கள். ஆனால், சில முக்கிய காரியங்களில் வெகு கவனம் செலுத்துவார்கள்.

இதன் காரணமாக இவர்கள் தன் தொழில் முறையில் முன்னேற்றமடையமாட்டார்கள். எனவே வருமானத்திலும் குறைவே இருந்து வரும்.

இவர்கள் தன் வாழ்நாளில் பல கஷ்ட நஷ்டங்களை அநுபவிக்க வேண்டிவரும்.

இவர்கள் தன் நிலையை அறிந்து சிந்தித்து, தன்னைத்தானே திருத்திக்கொண்டு, முன்னேற்றப் பாதையை அடைய வழி தெரியாதவர்கள். பிறர் யோசனை கூறினாலும் அதை ஏற்கமாட்டார்கள். தன் போக்கே சரியென்று நினைக்கக் கூடியவர்கள்.

இவர்களுக்கு வாய்க்கும் மனைவி, பல கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராயிருக்கவேண்டும். ஏனெனில்,



இவர்கள் தன் குடும்பத்தை போஷிக்க வேண்டுமே என்ற எண்ணமில்லாதவர்களாக இருப்பார்.

இவர்கள் சற்று கடுமையாக உழைக்கவேண்டியவராகவே இருப்பார். வேளாண்மைத் தொழில், வர்ணம் அடித்தல், தோட்ட வேலை போன்ற தொழில் முறைதான் தொடரும்.

இவர்கள் தன் வாழ்நாளில் பிற்பகுதியில் அதாவது 35 வயதிற்கு மேல் விலை பொருள்களை விற்பனை செய்து ஜீவிக்கக் கூடியவராக இருப்பார்கள். தானியங்கள், காட்டுமரங்கள், மண் சம்பந்தப்பட்ட பொருள், கல் சம்பந்தமான பொருள் இவைகள் சம்பந்தப்பட்ட வியாபாரமாக இருக்கும்.

ஆனால் வாழ்க்கை நிலையில் மேன்மையடையவோ, தாழ்ந்துபோகவோ முடியாது. சம நிலையான வாழ்க்கையே நடைபெறும்.

இவர்களுக்கு கல்லீரல் சம்பந்தமான சில வியாதிகள் ஏற்படும். வயிற்றில் சில கோளாறு ஏற்பட்டு பாதிக்கும். ஆனால், எவ்வித ஆபத்தும் ஏற்படாது. இடை இடையே கஷ்டத்தைக் கொடுத்து, சுகத்தையும் கொடுக்கும்.

இவர்களுடைய யெருக்கு ஏற்ற எண்ணைக் கண்டுபிடித்து, அதற்கேற்ற வெற்றி தரும் தேதிகளையும், இவர்கள் அணிய வேண்டிய ஆடை, இரத்தினக்கல் எவை என்பதையும் இந்தப் புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.

## எண் 4.

ச ச ச சு சு

பெரு விரலில் சரிந்த ரேகையும், ஆள்காட்டி விரலில் சரிந்தரேகையும், மூன்ருவது விரலில் சரிந்தரேகையும், நான்காவது விரலிலும், சுண்டு விரலிலும் சுற்று ரேகையும் தென்படுமாளுல் இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் இவர்கள் புகழ்பெற்ற மனிதர்களாகவே வாழ்வார்கள். மனோ தைரியம் உள்ளவர்களாகவும், நல்ல யூகத்துடன் அறிவாற்றல் பெற்றவர்களாகவும், இருப்பார்கள். இவர்களுக்கு நல்ல ஞாபகசக்தி இருக்கும். இவர் தன் தாய்மொழி தவிர பிரபல மொழிகளையும் கற்றுத் தேர்ந்தவர்களாக இருப்பார்கள். பிறமொழிகளை மற்றொரு மொழிக்கு மாற்றும் மொழி பெயர்ப்பில் தேர்ந்தவர்களாக இருப்பார்.

பிறருக்கு உதவக்கூடிய நல்ல மனமிருக்கும். பிறரைத் தூற்றவோ, பழிக்கவோ இவர்கள் மனம் இடந்தராது. பிறரை ஏமாற்றவோ மோசம் செய்யவோ மனம் வராது.

இவர்கள் பிறரை வெகு சீக்கிரம் கவர்ந்துவிடுவார்கள். இதன் காரணத்தால் இவர்களுக்கு பல நண்பர்கள் ஏற்படுவார்கள். ஆளுல், தக்க பெரிய மனிதர்கள் தவிர பயனற்றவர்கள் சிநேகம் ஏற்படாது.

இவர்கள் தன் காரியத்தில் கண்ணுயிருப்பார்கள். பிறரிடம் ஏமாறமாட்டார்கள். சொன்ன சொல் தவறமாட்டார்கள். குறித்த காரியத்தை குறித்த நேரத்தில், செய்து முடிக்கும் தன்மை உள்ளவர்களாக இருப்பார்கள்.



எந்தக் காரியத்தையும் சுறு சுறுப்புடன் வேகமாகச் செய்து முடிக்கும் மனப்பான்மையுள்ளவர்களாக இருப்பார்கள்.

இவர்களின் வாழ்நாளில் முன்பகுதியில் 30, 35 வரை உயர்வும், சமமும் கலந்த நிலையில் வாழ்க்கை நடைபெற்றுவரும். அதன்பின் உயர்வடையும். சுகமான ஜீவியம் இருக்கும். பிற்பகுதியில் வயோதிக காலத்தில் எவ்வகையான கஷ்டமுமின்றி உயர்ந்த நிலையில் சகல வசதிகளுடனும் வாழ்க்கை நடைபெறும்.

இவர்களின் தொழில்முறை கூட கடினமானதாக இராது. எழுத்து வேலைதான் இவர்களுக்கு அமையும். இவர்கள் செய்யும் தொழில் எழுத்து வேலையாக இருந்தாலும், மற்றொரு வகையிலும் இவர்களுக்கு தனிப்பட்ட வருமானம் தொடர்ந்து கிடைத்துவரும். இதன் காரணமாக நல்ல பண வசதி இருந்துக் கொண்டேயிருக்கும்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்களுக்கு உடல் நிலையில் கடினமான கோளாறு ஏதும் ஏற்படாது. சில தோல் சம்பந்தமான சில வியாதிகள் தோன்றி மறையும். ஆளுல், அதிக அளவில் பாதிக்காது. பயப்படத் தேவையில்லை.

இந்த ரேகை அமைப்பு உள்ளவரின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகள் எவை என்பதையும், இவர்கள் அணிய வேண்டிய ஆடை எவைஎன்பதையும் எந்த வகையான இரத்தினங்களை அணிந்துக் கொண்டால் அதிர்ஷ்டத்தை அடைய முடியும் என்பதையும் இந்த புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.

# எண் 5

சு-ச-ச-ச-ச

பெருவிரலில் சுற்று ரேகையும் மற்ற நான்கு விரல்களிலும் சரிவு ரேகை இருக்குமானல் இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள், முன்கோபியாக இருப்பார்கள். இவர்கள் தங்கள் வீட்டில் இருக்கும்பொழுது வீட்டிலுள்ளவர்கள் சிங்கத்தைக் கண்டு பயப்படுவது போல அடங்கி ஒடுங்கி இருப்பார்கள்.

இவர்கள் ஆரம்பிக்கும் எந்த ஒரு காரியத்தையும் வெகு விரைவாக செய்து முடிப்பார்கள். ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தால், அது எவ்வகையில் முடியும் என்பதைச் சிறிதும் சிந்தியாமல், செய்துவிடுவார்கள். இது சில சமயம் நன்மையாகவும், சில சமயம் தீமையாகவும் முடிந்துவிடுவது உண்டு.

இவர்கள் முன்கோபியாக இருப்பதால், இவர்களிடம் பலர் நெருங்கமாட்டார்கள். எனவே, இவர்களுக்கு பல நன்மைகள் இருக்க முடியாது.

இவர்கள் பிறரிடம் வீண் விதண்டாவாதம் செய்து, வம்படித்துக் கொள்வார்கள். இதன் காரணமாக இவர்களுக்கு சில விரோதிகளும் உண்டாவார்கள்.

இவர்கள் கல்வி விஷயத்தில் முன்னேற்றமடைய முடியாது.

இவர்கள் தொழில் முறைகூட கடினமானதாகவே இருக்கும். அதாவது, இயந்திர சம்மந்தமான தொழில் முறையாக இருக்கும். கட்டிடங் கட்டுவது, கட்டிடங்களுக்கான பொருள்கள் தயாரிப்பது போன்ற வகையில் கடின உழைப்பாகவே இருக்கும்.



இவர்கள் தொழில் முறையில் சேர பல சங்கடங்கள் இருந்துவரும். வேலை பார்க்கும் இடத்தில் பலருடன் வீண் தகராறு செய்துகொள்வார்கள். தங்கள் மேல் அதிகாரிகளுடன்கூட சண்டை பிடிப்பார்கள். எந்த ஒரு இடத்திலும் தொடாந்து வேலை செய்ய மாட்டார்கள். சில பெரிய மனிதர்கள் இவர்களுக்குச் சிபாரிசு செய்து வேலையில் வைத்தாலும்கூட, அங்கு நீடித்து வேலை செய்யமாட்டார்கள். இடையில் முறித்துக் கொண்டு வந்துவிடுவார்கள்.

இதன் காரணமாக இவர்கள் தங்கள் தொழில் முன்னேற்றமடைய முடியாமல், பின் நோக்கியே சென்றுகொண்டிருப்பார்கள்.

ஆகவே தக்க வருமானமின்றி வறுமையால் வாட வேண்டியிருக்கும். இவர்கள் வாழ்நாளில் பகுதிவரை அதாவது 30, 35 வயது வரை இவ்விதமே இருந்து வரும்

இந்த வயதுகளுக்குப் பின்னரே, இவர்கள் தங்கள் வாழ்க்கை நிலையை மாற்றி அமைக்க முற்படுவார்கள். முன்கோபம் தணியும். தன் குற்றத்தைத் தானே உணர்ந்து, பிறருடன் எவ்விதம் பழக வேண்டும், தொழில் முறையில் முன்னேற்றமடைய எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் என்பதை அறிவார்கள்.

36 வயது முதல் ஒரு நல்ல முன்னேற்றம் ஏற்படும். பலவகையிலும் சுகமாக வாழ வழி ஏற்படும்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்களுக்கு அடிக்கடி சலதோஷம் உண்டாகும். சிறுநீர் சம்பந்தப்பட்ட

உறுப்புகளில் ஏதாவது கோளாறு ஏற்பட்டு அது பிறகு குணமாகும். சில சமயங்களிலும் அஜீரணம் காரணமாக வயிற்றுவலியும் உண்டாகும். ஆனால் நீடித்த காலம் பாதிக்காது. சில நாட்களிலேயே குணமாகும்.

இந்த ரேகைதாரரின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகளையும், அணியவேண்டிய ஆடை ஆபரங்களையும், இரத்தினக் கற்களின் விபரங்களையும் இந்த புஸ்தகத்தின் கடைசிப்பக்கம் காணலாம்.

## எண் 6

சு-ச-ச-சு-ச

பெருவிரலில் சுற்று ரேகையும், இரண்டாவது மூன்றுவது விரல்களில் சரிவு ரேகையும், நான்காவது விரலில் சுற்று ரேகையும், சுண்டு விரலில் சரிவு ரேகையும் தென்படுமானல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் மனம் ஒரு நிலையில் இருக்காது. அலைபாயும் மனமுள்ளவர்களாக இருப்பார்கள். அதாவது ஒரு காரியத்தைச் செய்யும்பொழுதே மனது வேறு காரியத்தில் ஈடுபடும். செய்யும் காரியம் தடைபடும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு இடத்திற்குச் செல்லத் திட்டமிடுவார்கள். ஆனல் அந்த நேரம் வந்தவுடன் மனம் மாறும். சரி நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாமென்று நின்றுவிடுவார்கள். இதன் காரணத்தினல் இவர்கள் தன் தொழில் முறையில் முன்னேற்றமடைய பல வாய்ப்புகளை இழந்துவிடுவார்கள்.

இவர்களுக்கு கல்வி விஷயத்திலும் முன்னேற்றம் இருக்காது. இவர்களுக்குக் கடினமான தொழில்முறை



இருக்காது. எழுத்து வேலை, எடுபிடி போன்ற சுலபமான வேலைதான் கிடைக்கும். இவர்கள் தன் வாழ்நாளில் பகுதிவரை சமநிலையிலே வாழவேண்டியிருக்கும். பின் பகுதியில் வாழ்க்கைநிலை மாறும். பிறகு, ஆயுள்வரை சுகமாக வாழ்வார்கள்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்களுக்கு தொண்டை சம்பந்தமான சில வியாதிகளும், சுவாசாசயச் சம்பந்தமான சில வியாதிகளும் ஏற்பட்டு குணமாகும். ஆனல், நெடுநாட்கள் வரை தொடர்ந்து பாதிக்காது. இடை இடையே தோன்றி மறையும்.

இந்த ரேகைதாரர்களின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகளையும், அணியவேண்டிய ஆடை விபரத்தையும், இரத்தினக் கற்கள் விவரத்தையும் இந்தப் புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.

## எண் 7

சு-ச-ச-ச-சு

பெரு விரலில் சுற்று ரேகையும், ஆள்காட்டி விரலில் சரிவு ரேகையும், அதை அடுத்த இரண்டு விரல்களிலும் சரிவு ரேகையும், சுண்டு விரலில் சுற்று ரேகையும் இருக்குமானல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் பெருந்தன்மை உள்ளவர்களாக இருப்பார்கள். இந்தவிதமான ரேகை அமைப்பை அதிகமாகக் காண முடியாது. இவர்கள் வெகு அடக்கமுள்ளவர்களாகவும், பிறரை மதித்து நடக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். யாருடனும் அன்பு மரியாதையுடன் பேசுவார்கள். இவர்களுக்குக் கோபம் வருவது அபூர்வம்.

இவர்கள் எந்தக் காரியத்தையும் யோசித்து, அவசரமின்றி, செய்யவேண்டிய காரியமா? ஒதுக்கவேண்டிய காரியமா? என்பதைத் தீர்மானித்த பிறகே அந்தக் காரியத்தைத் தொடங்குவார்கள்.

வீண் பேச்சுகள் பேசமாட்டார்கள். அனுவசியமான எந்தக் காரியத்திலும் பிரவேசிக்க மாட்டார்கள். இவர்கள் படிப்பு விஷயத்தில் முன்னேற்றமடையக் கூடியவர்களாகவே இருப்பார்கள்.

குறைந்த கல்வியறிவு பெற்றிருந்தாலும் தன் அறிவைப் பயன்படுத்தி, தன் கல்வியறிவை மேலும் விருத்தி செய்துக் கொள்வார்கள்.

இவர்கள் எழுத்து சம்பந்தமான தொழில் முறையில் முன்னேற்றமடையக் கூடியவர்களாக இருப்பார்கள் இவர்கள் பொதுக் கூட்டங்களில் பேசக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் மக்களுக்குப் பல புதிய வழிகளைக் காட்டும் ஒரு வழிகாட்டியாக விளங்குவார்கள்.

இவர்கள் வயோதிக காலத்தில் அமைதியுடன் சுகமாக வாழ்வார்கள். சகல வசதியும் அமைந்திருக்கும்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் மூல சம்பந்தமான நோயினுல் பாதிக்கப்படுவார்கள். பல்வலி, தலைவலி போன்ற அற்ப வியாதியினுல் அடிக்கடி பாதிக்கப்படுவார்கள்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்களின் பெயருக்கு ஏற்ப வெற்றி தரும் தேதிகளையும், அணிய



வேண்டிய ஆடை, இரத்தினக்கல் பற்றிய விபரங்களையும் இந்த புஸ்தகத்தின் கடைசி பக்கத்தில் காணலாம்.

## எண் 8

சு-ச-ச-சு-சு

பெருவிரலில் சுற்று ரேகையும், ஆள்காட்டி விரலில் சரிவு ரேகையும், அதற்கு அடுத்த விரலில் சரிவு ரேகையும், நான்காவது விரலில் சுற்று ரேகையும் சுண்டு விரலில் சுற்று ரேகையும் தென்படுமானுல் இந்த ரேகை அமைப்பு உள்ளவர் ஒரு பெரிய புகழ் பெற்ற குடும்பத்தில் பிறந்தவர்களாகவே யிருப்பார்கள். இவர்களின் முன்னேர்கள், பாட்டன் பாட்டி போன்றவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றவர்களாகவே யிருப்பார்கள்.

இவர்கள் பிறரோடு அன்புடன் பேசக்கூடியவர்களாக இருப்பார்கள். பிறருக்கு உதவி செய்வதற்கு மனம் உள்ளவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு பல பேர் நண்பர்களாக இருப்பார்கள். அவ்வளவு பேரும் இவர்கள் மேல் அன்பு செலுத்தக் கூடியவர்களாகவும், உயிர்த் தோழர்களுமாகவே இருப்பார்கள்.

அநேகமாக இவர்கள் பிறரிடம் ஊழியம் செய்யக் கூடியவர்களாக இருக்க மாட்டார்கள். ஒரு முதலாளி போன்ற ஸ்தானத்தில்தான் இருப்பார்கள்.

இவர்களிடம் பலர் வேலை செய்வார்கள். இவர்களிடம் வேலை செய்யும் வேலையாட்களுக்கு திருப்தியான முறையில் ஊதியம் அளிப்பார்கள். வேலை செய்

யும் எவரும் இவர்கள் மேல் குறை கூறவே மாட்டார்கள். மாறாக, உண்மையோடு உழைத்து மேலும் இவர்கள் அன்பைப் பெறுவார்கள்.

இவர்கள் பிறரை முழுவதும் நம்பி விடுவார்கள். கடைக்குச் சென்று இவர்கள் வாங்கும் பொருளுக்கு இவர்கள் பேரம் பேசவே மாட்டார்கள். சொன்ன விலையைக் கொடுத்து வாங்குவார்கள்.

இவர்களுடைய நற்குணம் வளர்வது போல இவர்களுக்குப் பணவசதியும் பெருகும். இவர்கள் செய்யும் தொழில் முறையும் மேலும்மேலும் பெருகும். வருமானமும் படிப்படியாக உயரும்.

இவர்கள் மந்திர தந்திர காரியங்களிலும், ஜோதிட சம்பந்தமான விஷயங்களிலும் விருப்பமுள்ளவர்களாக இருப்பார்கள்.

விஞ்ஞானம், மற்றும் பல விநோதமான காரியங்களை ஆராய்ந்துக் கொள்ள விருப்பமுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் பால் பண்ணை, கட்டிட இலாக்கா, மரம், லோகம் சம்பந்தமான பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை, இயந்திர சம்பந்தமான தொழிற்சாலை இவைகளை நிர்வகிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். பருத்தி கம்பளி போன்ற துணிகளை உற்பத்தி செய்யும் ஆலைகளை வைத்து நிர்வகிக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் வயது காலத்தில் பிறருக்கு நன்னெறி போதிக்கும் உபதேசகராகவும் இருப்பார்கள்.



இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் அடிக்கடி வயிற்று வலியினால் பாதிக்கப்படுவார்கள். வயோதிக காலத்தில் பாரிச வாயுவினால் பாதிக்கப்படுவார்கள்.

இந்த ரேகைதாரருடைய பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகளையும் அவர்கள் அணியக்கூடிய ஆடைகள் எப்படியிருக்க வேண்டும்? எந்த வகையான இரத்தினக் கல்லை அணிந்தால் முன்னேற்றமடைய முடியும் என்ற விபரத்தை இந்த புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.

## எண் 9

### ச-சு-ச-ச-ச

பெருவிரலில் சரிவு ரேகையும், ஆள்காட்டி விரலில் சுற்று ரேகையும், அதற்கு அடுத்த விரலில் சரிவு ரேகையும், நான்காவது விரலில் சரிவு ரேகையும், சுண்டு விரலில் சரிவு ரேகையும் தென்படுமானால், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் பரந்த மனப்பான்மை உள்ளவர்களாகவே இருப்பார்கள்.

இவர்கள் பலருக்கு உதவிசெய்யக் கூடிய நல்ல பண்பாடுடையவர்களாகவே இருப்பார்கள். பிறருடன் அன்பாகப் பேசுவார்கள். இரக்கமான குணம் இருக்கும். சொன்ன சொல் தவறி நடக்க மாட்டார்கள்.

பிறர் மனம் நோகும்படியான எந்த ஒரு பேச்சும் பேசமாட்டார்கள். இவர்களுக்குப் பல பெரிய மனிதர்களின் சிநேகமிருக்கும்.

எந்த ஒரு காரியத்தையும் தங்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து அறிவார்கள். அனுவசியமான

எந்த ஒரு காரியத்திலும் பிரவேசிக்கமாட்டார்கள். இவர்களைப் பார்க்கும் எவரும் இவர்களிடம் பேச ஆர்வம் கொள்வார்கள். இவர்களின் நடை உடை பாவனை பிறரைக் கவரக் கூடியதாக இருக்கும்.

இவர்கள் தன்னுடைய பிறந்த ஊரில் வசிக்க முடியாது. வேறு இடம் மாறி வசிப்பார்கள்.

இவர்களுக்கு கல்வி விஷயத்தில் முன்னேற்றம் இருக்காது. இருந்தாலும் இவர்களின் தோற்றம் இவர்கள்மேல் படிப்பு படித்தவர்களின் நிலைக்கு மாற்றி விடும்.

இவர்களின் தொழில் முறை கடினமானதாக இருக்காது. சுலபமான வகையில் வருமானம் கிடைக்கும். இவர்கள் தொழில்முறை ஒரு பொறியியல் வல்லுனராகவோ, ஒரு ஸ்தானத்தின் தலைவராகவோ தான் இருக்க முடியும்.

இவர்களுடைய தொழில்முறை ஆரம்பகால முதல் சுமார் 35 வயதுவரை நல்ல முன்னேற்றத்துடன் வாழ்வார்கள். பின் பகுதியில் வரவர வருமானம் குறையும். இடையில் சுமார் 9 வருட காலம் சமநிலையிலிருக்கும். பிறகு மறுபடி உயர்ந்த நிலைக்கு ஏறும்.

அவர்கள் தன் வயது காலத்தில் பிறருடன் கூட்டாக எந்த வியாபாரம் செய்தாலும் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நல்ல வருமானம் கிடைக்கும்.

இவர்களுக்கு அடிக்கடி மலச்சிக்கல் ஏற்படும். எனவே இவர்கள் மலச்சிக்கலின்றி வாழ ஆகார வகையுடன் தினசரி ஏதாவது கீரை வகைகளைச் சேர்த்து வர வேண்டும்.



இவர்களுக்கு அடிக்கடி பல்நோய் ஏற்படும். மூக்கடைப்பு சம்மந்தமான சில சங்கடங்களும் ஏற்பட்டு குணமாகும். அடிக்கடி வயிற்றுவலி ஏற்பட்டு குணமாகும்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்களின் பெயருக்கு எந்தத் தேதி வெற்றி தரக்கூடியது, எந்த வகையான ஆடை அணிய வேண்டும், எந்த வகையான இரத்தினக் கல் அணிந்தால் தொழில் முறை முன்னேற்றமடையும் என்பதை அறிய வேண்டுமானல் இந்த புஸ்தகத்தின் கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்.

## எண் 10

ச-சு-ச-சு-ச

பெருவிரலில் சரிந்த ரேகையும், ஆள்காட்டி விரலில் சுற்றுரேகையும், அதற்கு அடுத்த விரலில் சரிவு ரேகையும், நான்காவது விரலில் சுற்று ரேகையும் சுண்டுவிரலில் சரிவு ரேகையும் தென்படுமானல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள், கடின சித்தம் உள்ளவர்களாகவே யிருப்பார்கள். பிறருடன் அன்புடன் பேசமாட்டார்கள்.

இவர்கள் ஒரு சந்தேகப் பிராணியாகவே இருப்பார்கள். எதை எடுத்தாலும் சந்தேகம். எந்தக் காரியத்திலும் சந்தேகம்.

இவர்களுக்கு கல்வி விஷயத்தில் முன்னேற்றமே ஏற்படாது. ஓரளவு படித்திருந்தால் அதுவே மேல் என்றுதான் சொல்லவேண்டும்.

இவர்கள் தொழில் முறை சற்று கடினமானதாகவே இருக்கும். இவர்கள் தன் மனச் சந்தேகம்

காரணமாக எங்கும் நிலைத்து வேலை செய்யமாட்டார்கள். இதன் காரணத்தினால் இவர்கள் தேவையான வருமானத்தை அடைய முடியாமல் வறுமையிலேயே வாழ்வார்கள்.

இவர்களைத் துன்பம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

இவர்கள் வேலை செய்யுமிடத்தில் இவர்கள் மேல் வீண் வதந்தி கிளம்பும். இதன் காரணமாக இவர்கள் வேலையினின்றும் நீக்கப்படுவார்கள்.

இவர்கள் தன் நண்பர்களுடன் நெருங்கிப் பழகமாட்டார்கள். ஒரு சிறு குற்றத்தையும் பெரிதாக்கி வீணாக சண்டையிட்டு தன் சிநேகிதரைப் பகைத்துக் கொள்வார்கள்.

இவர்கள் வாழ்நாளின் பின்பகுதியில் இவர்கள் வாழ்க்கை நிலை மாறும். திருந்தி நடப்பார்கள். தன்னுடைய போக்கை மாற்றி நடந்து தொழில் முறையில் முன்னேற்றமடைந்து சுகமாக வாழ்வார்கள்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்களுக்கு தொண்டை, மூக்கு சம்பந்தமான சில நோய்கள் ஏற்பட்டுக் குணமாகும். ஆனால் நீடிக்காது.

இந்த ரேகைதாரரின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதி எது, அணியவேண்டிய ஆடை எவை, இது எந்தவிதமான இரத்தினக் கல் அணிந்தால் முன்னேற்றமடையலாம் என்ற விபரத்தை இந்த புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.



## எண் 11

### ச-சு-ச-ச-சு

பெருவிரலில் சரிவு ரேகையும், ஆள்காட்டி விரலில் சுற்று ரேகையும், அதற்கு அடுத்த விரலில் சரிவு ரேகையும், நான்காவது விரலில் சரிவு ரேகையும் சுண்டு விரலில் சுற்று ரேகையும் தென்படுமானால் இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் முரட்டுத்தனமான சுபாவம் உள்ளவர்களாகவே இருப்பார்கள்.

பிறரோடு அன்புடன் பேசமாட்டார்கள். பிறர் மேல் இரக்கம் கொள்ளமாட்டார்கள். வீண் பேச்சுப் பேசி வீண் விதண்டாவாதம் செய்வதில் விருப்பமுள்ளவராக இருப்பார்கள்.

இவர்களுக்கு கல்வி விஷயத்தில் முன்னேற்றமே ஏற்படாது. தொழில் முறையில் கடினமான உழைப்பு இருக்கும். தொழில் முறையும் ஒரு இடமாக நிலைத்து நிற்காது. குறைந்த வருமானத்துடன் வறுமையில் தான் வாழ்க்கை நடைபெறும்.

தொழில் முறை செய்யும் இடங்களில் மேல் அதிகாரிகளுடன் தகராறு செய்துக்கொள்வார்கள். அதிகாரிகளைக் கூட எதிர்த்துக் கேள்வி கேட்பார்கள். இதன் காரணமாக இவர்களைப் பலர் வேலைக்கு வைத்துக் கொள்ள விரும்பமாட்டார்கள்.

சில இடங்களில் அதிகாரிகளைப் பேசிவிட்ட பிறகு, அவர்களிடமே மன்னிப்பும் கேட்பார்கள். இது இவர்களுடைய சுவாபம். சில சமயம் அதிகாரிகளும் மன்னித்து மறுபடி வேலை கொடுப்பார்கள். இருந்தாலும் ஒரே இடத்தில் வெகுநாள் நீடிக்க முடியாது.

இவர்களுக்கு 40 வயதிற்கு மேல்தான் தன் நிலை உணரும் சக்தி ஏற்படும். அதுமுதல் தன் போக்கை மாற்றிக் கொள்வார்கள். கோபமும் முரட்டுத்தனமும் தானே மாறும்.

வாழ்க்கை நிலையில் முன்னேற்றமடைந்து வயதான காலத்தில் சுகமாக வாழ்வார்கள்.

இவர்களுக்கு கண் சம்பந்தமான சில வியாதிகள் தோன்றி மறையும். குடல்புண் உண்டாகி ஆறும்.

இந்த ரேகைதாரரின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகளையும், அணிய வேண்டிய ஆடையின் நிறம், இரத்தினக்கல்லின் நிறம் இவைகளைப்பற்றி இந்தப் புஸ்தகத்தின் கடைசிப் பக்கத்தில் காணலாம்.

## எண் 12

ச-சு-ச-சு-சு.

பெரு விரலில் சரிவு ரேகையும் ஆள்காட்டி விரலில் சுற்று ரேகையும் மூன்ருவது விரலில் சரிவு ரேகையும் நான்காவது விரலிலும், சுண்டு விரலிலும் சுற்று ரேகைகள் தென்படுமானல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் ஆடம்பரப்பிரியர்களாக இருப்பார்கள். உலகத்திலுள்ள சந்தோஷ காரியம் அத்தனையையும் அநுபவிக்க வேண்டுமென்று ஆசைப்படக் கூடியவர்கள்.

மீன் பிடிப்பதிலும் வேட்டையாடுவதிலும் ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள்.

நன்ருகச் சாப்பிடவேண்டும், நிறையக் குடிக்க வேண்டும், ஆனந்தமாகப் பாடவேண்டும் என்ற எண்



ணம் சதாகாலமும் மனதிலிருக்கும். சிலர் இதே நிலையில் வாழ்க்கையை நடத்திச் செல்வார்கள்.

இவர்கள் தன் வசதிக்காக வீணுகப் பணத்தைச் செலவிட தயங்கமாட்டார்கள்.

பிறர் காரியங்களில் இவர்கள் தன் மனதைச் செலுத்த மாட்டார்கள்.

இவர்கள் நன்ருகப் பேசும் திறமை பெற்றவர்களாக இருப்பார்கள். ஒரு பொருளை பலவாறு திரித்துக் கூறுவதில் கைதேர்ந்தவர்களாகவும் இருப்பார்கள். இவர்களுக்கு நல்ல ஞாபகசக்தி இருக்கும். நீண்ட நேரம் தொடர்ந்து பேசும் திறமையுள்ளவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் பெரிய ஐசுவரிவான்கள் போல பட்டுப் பட்டாடை, கார் மற்றும் பல வசதிகளுடன் வாழக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் எந்த வகையிலும் தொழில் முறை செய்ய விரும்பமாட்டார்கள். உடல் உழைப்பில்லாத வகையில் வருமானம் கிடைக்கும் எந்தத் தொழிலையும் மேற்கொள்வார்கள்.

இவர்கள் எப்பொழுதும் டாக்டரிடம் போய்வர வேண்டியதாகவோ, அல்லது டாக்டர் அடிக்கடி இவர்கள் வீட்டுக்கு வரவேண்டியதாகவோ இருக்கும்.

இவர்களுக்கு நீரிழிவு சம்பந்தமான வியாதிகள் தோன்றும். ஆனல் வயோதிக வயதில் பாதிக்கும்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகள் இவை, எந்த நிறமான

ஆடை அணிந்தால் முன்னேற்றமிருக்கும் எந்த வகையான இரத்தினக் கல் வாழ்க்கையில் முன்னேற்றத்தைத் தரும் என்ற விபரத்தை இந்தப் புஸ்தகத்தின் கடைசிப் பக்கத்தில் காணலாம்.

## எண் 13

சு-சு-ச-ச-ச

பெரு விரலில் சுற்று ரேகையும், ஆள்காட்டி விரலில் சுற்று ரேகையும், அடுத்த மூன்று விரல்களிலும் சரிவு ரேகை தென்படுமானால், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் தெய்வபக்தி யுள்ளவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் பிறரிடம் அன்புடன் பழகுவார்கள். இவர்களுக்கு கல்வி விஷயத்தில் முன்னேற்றம் இருக்காது.

இவர்கள் ஒரு நடனப் பிரியர்களாக இருப்பார்கள். எங்காவது பரத நாட்டியம், ஆங்கில டான்ஸ் நடைபெறுகிறது என்று கேள்விப்பட்டால் அங்குச் செல்லத் தவற மாட்டார்கள். இந்த வகையான சபாக்களில் அங்கத்தினர்களாகவும் இருப்பார்கள். இந்த வகைக்கு இவர்கள் சிலவு செய்யத் தயங்கமாட்டார்கள்.

இவர்கள் தொழில் முறை கடினமானதாக இருக்காது. இவர்கள் பெரும் தொழில் ஸ்தாபனங்களில் உடல் உழைப்பில்லாத தொழில் செய்து வருமானமடையக் கூடியவர்களாகவே இருப்பார்.

சிலர் வைத்தியத் தொழில் முறையில் தேர்ச்சியடைவதும் உண்டு.



சிலர் சர்க்கார் உத்தியோகத்திலும், சிலர் மத சம்பந்தமான போதகராகவும் கூட இருப்பார்கள்.

இவர்களின் வாழ்க்கை நிலை எந்த வகையிலும் பாதிக்கப்பட மாட்டாது. தேவையான அளவு வருமானத்துடன் வாழ்வார்கள்.

இவர்களுக்கு இருதய சம்பந்தமான சில நோய் ஏற்பட்டுக் குணமாகும்.

இந்த ரேகைதாரரின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதி எவை? எந்த வகையான ஆடை அணிய வேண்டும்? எந்த வகையான இரத்தினக் கல் முன்னேற்றத்தைத் தரும் என்ற விபரத்தை இந்த புஸ்தகத்தின் கடைசி பக்கத்தில் காணலாம்

## எண் 14

சு-சு-ச-சு-ச

பெருவிரலில் சுற்று ரேகையும், ஆள்காட்டி விரலில் சுற்று ரேகையும் மூன்றுவது விரலில் சரிவு ரேகையும், நான்காவது விரலில் சுற்று ரேகையும், சுண்டு விரலில் சரிவு ரேகையும் தென்படுமானால் இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் எப்பொழுதும் ஏகாந்தமாக தனித்து வாழவே விரும்புவார்கள். எடுக்கும் எந்தக் காரியத்தையும் சீக்கிரமே செய்து முடித்து விடுவார்கள்.

இவர்கள் வியாபார ஸ்தலங்களில் விற்பனையாளராக இருக்கத் தகுதியானவர்கள். இவர்கள் கேட்பவர்களுக்கு உடனடியாக பதில் கூறுவார்கள். கேட்கும் பொருளை உடனே எடுத்துக் கொடுப்பார்கள்.

இவர்கள் எந்த ஒரு பொருளைப்பற்றியும் விரிவுரை ஆற்றக்கூடிய திறமை பெற்றவர்களாக இருப்பார்கள்.

எந்த ஒரு விவாதத்திலும் இவர்கள் எதிரியைச் சிதரடித்து, வெற்றி கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்சள் பல தேசங்களைச் சுற்றிப் பார்க்கக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் கல்வி விஷயத்தில் மேல்போக முடியாது. ஓரளவுதான் கற்க முடியும். இவர்களின் தொழில் முறை கடினமானதாக இருக்காது. மேல் போக்கான வகையில் நல்ல வருமானத்தை அடையக்கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் தம் வாழ்வில் பெரும் அதிர்ஷ்டசாலியாகவே இருப்பார்கள். இவர்களுக்கு சிறு வயது முதலே அதிர்ஷ்டச் சக்கரம் சுழல ஆரம்பிக்கும். 14-15 வயதிலேயே ஒரு பெரும் அதிர்ஷ்டத்தை அடைவார்கள். 34 வயது வரை நல்ல வருமானம் இருக்கும். 37 முதல் 12 வருடங்களுக்கு நல்ல யோகமிருக்கும். இதற்குப் பின் இவர்கள் ஆயுள்வரை சம நிலையான வாழ்க்கையே நடைபெறும்.

இவர்களுக்கு அடிக்கடி காய்ச்சல் வந்து குணமாகும். தைபாயிட் காய்ச்சல்கூட உண்டாகி குணமாகும். எவ்வித ஆபத்தும் நேராது.

இந்த ரேகைதாரரின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதியையும் அணிய வேண்டிய ஆடை, இரத்தினக்கல் இவைபற்றிய விஷயங்களையும் இந்தப் புஸ்தகத்தின் கடைசிப்பக்கம் காணலாம்.



# எண் 15

## சு-சு-ச-ச-ச

பெரு விரலில் சுற்று ரேகையும் ஆள்காட்டி விரலில் சுற்று ரேகையும், மூன்ருவது விரலிலும் நான்காவது விரலிலும் சரிவு ரேகையும், சுண்டு விரலில் சுற்று ரேகையும் தென்படுமாளுல் இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் கல்வியில் முன்னேற்றமடைய முடியாது.

இவர்கள் எந்தக் காரியத்தையும் திடமனதுடன் செய்யமாட்டார்கள். மனே தைரியம் குறைவாக இருக்கும். படோடோபமாகப் பேசுவார்கள். உடனே அடங்கிவிடுவார்கள். பேச்சுத் திறமை இருக்காது. தாங்கள் செய்யும் தொழில் முறையிலேயே நம்பிக்கை இருக்காது.

இவர்களுகக்கு 24 வயது வரையிலும் ஒரு முன்னேற்றமே இருக்காது. அதற்குப் பின் தன் நிலையை அறிந்து, வாழ்க்கையில் முன்னேற்றமடைய பிரயாசை எடுப்பார்கள்.

இவர்களுக்கு ஆரம்பத்தில் உபாத்தியாயர் வேலையோ, வர்ண வேலையோதான் கிடைக்கும். அதன் பின் வைத்திய சம்பந்தமான ஒரு தொழில் சிலகாலம் வரை நடைபெறும். இந்த சமயம் நல்ல வருமானம் கிடைக்காது. சிலவுக்கு ஏதோ கிடைத்து வரும். அவ்வளவுதான்!

இவர்கள் சர்க்கார் சம்பந்தமான வேலையிலோ, பெரிய ஸ்தாபனங்களில் சம்பளம்பெற்று உழைக்கவோ

முடியாது. தனிப்பட்ட முறையில் தனக்குமேல் ஒருவர் இல்லை என்ற நிலையில் வாழக் கூடியவராக யிருப்பார்.

இவருக்கு 35 வயதிற்குமேல் தொழில் முறை மாறும் ஒரு சொந்த வியாபாரம் தொடரும். அது ஒரு உணவு சம்பந்தமான பொருள்களை விற்கவோ, அல்லது சிற்றுண்டி, பானம் இவைகளை விற்கக் கூடிய வியாபார நிலையமாக இருக்கும். இந்த வகை யில் தொடர்ந்த வருமானம் கிடைக்கும்.

35 வயதுக்குமேல் 60 வயது வரையிலும் இதே தொழில் முறை மூலம் வருமானம் கிடைத்து பல வகை யிலும் கஷ்டமின்றி சுகமாக வாழக்கூடியவர்களாகவே இருப்பார்கள்.

இவர்களுக்கு கண் நரம்பு சம்பந்தமான வியாதிகள் தோன்றி குணமாகும். இவர் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதி மற்றும் விபரங்களை இந்த புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.

## எண் 16

சு-சு-ச-சு-சு

பெருவிரலில் சுற்று ரேகையும், ஆள்காட்டி விர லில் சுற்று ரேகையும், மூன்றுவது விரலில் சரிவு ரேகை யும் நான்காவது விரலிலும் சுண்டு விரலிலும் சுற்று ரேகையும் தென்படுமானல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்க ளாகவே இருப்பார்கள்.

அவர்களுக்கு இரக்கமான குணம் இருக்கும். கஷ்டப்படுகிறவர்களுக்கு இறங்குவார்கள். ஏழைக ளுக்கு இரங்குவார்கள். ஆனல், பொய் பித்தலாட்டம்



செய்பவர்களுக்கும், கெட்ட வழியில் பிரவேசிப்பவர்க ளுக்கும் எக்காரணம் கொண்டும் உதவமாட்டார்கள்.

இவர்கள் கல்வி விஷயத்தில் மேல் போகத் தடை படும். ஆனல், அநுபவம் காரணமாக மேல் படிப்பு உள்ளவர்களைப் போல நடந்துக் கொள்வார்கள். அதற்கேற்ற அறிவும் ஆற்றலும் பெற்றிருப்பார்கள்.

இவர்களுக்கு ஒரு தொழில் என்று நிலைக்காது. உபாத்தியாயராகவும் இருக்கலாம் ஒவியம் வரையும் தொழிலாகவும் இருக்கலாம். வைத்தியத் தொழிலாக வும் இருக்கலாம். இரசாயனத் துறையில் ஆராய்ச்சி யாளராகவும் இருக்கலாம்.

இந்தத் தொழில் முறையெல்லாம் சுமார் 30 வயது வரைதான் இருக்கும். அதன்பின் மாறிவிடும்.

உலோக சம்பந்தமான வியாபாரம், இயந்திர சம்பந்தமான வியாபாரம் நெசவு சம்பந்தமான தொழில், புஸ்தகம் வெளியிடும் ஸ்தாபனம் இவை களில் ஒன்று ஸ்திரமாக அமைந்து அதன்மூலம் தொடர்ந்து வருமானம் கிடைத்துவரும்.

30க்கு மேல் 55 வயது வரையிலும் இந்த வகையில் நல்ல வருமானம் கிடைக்கும். ஆயுள்வரை எந்தவகை யிலும் கஷ்டமின்றி சுகமாக வாழமுடியும்.

இவர்களுக்கு கண், பல் சம்பந்த நோய் அடிக்கடி தோன்றி பாதித்துக் குணமாகும். இவர்களுக்குக் காலில் பித்தவெடிப்பு இருந்துகொண்டே யிருக்கும்.

இந்த ரேகைதாரருடைய பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகள் எவை, எந்த வகையான ஆடை, எந்த வகையான இரத்தினக்கல் அணிந்தால் முன்

னேற்றமடைய முடியும் என்பதை அறிய இந்தப் புஸ்தகத்தின் கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்.

## எண் 17

ச-ச-சு-ச-ச

பெருவிரலில் சரிவு ரேகையும், ஆள்காட்டி விரலில் சரிவு ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலிலும், சுண்டு விரலிலும் சரிவுரேகைத் தென்படுமாஞல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் பிறந்தது முதல் ஆயுள்வரை எந்த வகையிலும் கடினமான நோயினல் பாதிக்கப்படவே மாட்டார்கள். ஏதோ சிலசமயம் காய்ச்சல், தலைவலி, வயிற்றுவலி என்று வந்து இரண்டொரு நாளில் குணமாகிவிடும்.

இவர்கள் நல்ல யோகசாலிகளாகவும் இருப்பார்கள். மற்றவர்கள் அநுபவிக்ககூடிய பல வசதிகளை இவர்கள் அநுபவிக்கமுடியும் மற்றவர்களின் வாழ்க்கை நிலைக்கும் இவர்களுடைய வாழ்க்கை நிலைக்கும் நிறைய மாறுபாடு இருக்கும்.

இவர்கள் மன இரக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். பிறருக்கு உதவும் நற்குணம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் கல்வியில் மேன்மையடைந்து, தத்துவ ஞானம் பெற்றவர்களாகவும் இருப்பார்கள். தத்துவார்த்த விஷயங்களில் ஆராய்ச்சி செய்வதில் அதிக ஆர்வம் உள்ளவராகவும் இருப்பார்கள்.



இவர்கள் பேச்சுத் திறமைப் பெற்றவர்களாக இருப்பார்கள். எந்தத் தொழில் முறையிலும் அநுபவம் பெற்றவர்களாகவும், கைப்பழக்க முள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் சித்திரம் வரைவதில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருப்பார்கள்.

மேலும், மர சம்பந்தமான எந்தப் பொருளை தயாரிக்கவும், நெசவு சம்பந்தமான தொழில் முறையிலும் நல்ல முன்னேற்றமடைய முடியும்.

இவர்கள் மேற்கொள்ளும் எந்தத் தொழில் முறையும் இவர்களுக்கு வருமானம் கொடுக்கக்கூடியதாகவே இருக்கும்.

இவர்களுக்குத் தொழில் முறையில் நல்ல திறமை இருக்கும். எனவே, இவர்கள் ஆரம்பிக்கும் எந்தத் தொழிலும் தோல்வியடைவதில்லை.

இவ்வளவு திறமை இருந்தும் சில சமயம் முக்கிய விஷயங்களை மறந்து விடுவார்கள்.

இவர்கள் குடும்பமே பெரியதாக இருக்கும். இவர்களுக்கு அநேக சகோதரர்களும், சகோதரிகளும் கூட இருப்பார்கள்.

இவர்கள் தங்கள் பெற்ரோருக்கும், உடன்பிறந்த சகோதர சகோதரிகளுக்கும் தேவையான உதவிகளைச் செய்ய எப்பொழுதும் பின்வாங்க மாட்டார்கள்.

சமயம் கிடைத்தபோது, வேதாந்த விஷயங்களைப் பற்றி பிறருக்கு எடுத்துக்கூறி, அவர்களை நல்வழிக்குக் கொண்டுவர பிரயாசைப் படுவார்கள்.

இவர்கள் வயோதிக காலத்தில் ஒரு சிறந்த தெய்வபக்தராக இருப்பார்கள். அந்த சமயம் தன் குடும்பத்தை விட்டு, பல மணி நேரம் தனித்து இருக்க விரும்புவார்கள்.

இவர்கள் வாழ்க்கையில் எவ்விதமான கஷ்டநஷ்டமும் ஏற்படாது. ஆயுள்வரை சுகமாக வாழக்கூடியவர்கள்.

இவர்கள் எல்லாவகையிலும் வசதி பெற்றவர்களாதலால் இவர்களுக்குத் தனிப்பட்ட வெற்றி தரும் தேதியோ, முன்னேற்றம் தரும் ஆடை, இரத்தினக் கற்களோ தேவையில்லை.

## எண் 18

ச-ச-சு-சு-ச

பெருவிரலில் சரிவு ரேகையும், ஆள்காட்டி விரலில் சரிவு ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சுற்று ரேகையும், சுண்டு விரலில் சரிவு ரேகையும் தென்பட்டால், இந்த ரேகை அமைப்பு உள்ளவர் எப்பொழுதும் உரத்த குரலிலேயே பேசுவார்கள்.

இவர்கள் கள்ளங் கபடமற்றவர்களாக இருப்பார்கள். எந்த விஷயத்தை பிறரிடம் கூறலாம், எந்த விஷயத்தை பிறரிடம் கூறக்கூடாது என்பதை அறிய மாட்டார்கள். மனதில் தோன்றியதை அப்படியே சொல்லிவிடுவார்கள்.

இவர்கள் பிறருடன் அன்போடு பேசிப் பழகுவார்கள்.



ஆனால் இவர்களுக்குத் திடீரென கோபம் வரும். உடனே மாறிவிடும். எடுக்கும் எந்தக் காரியத்தையும் தாமதமின்றி வெகு சீக்கிரமாகச் செய்து முடித்துவிட வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாகவே இருப்பார்கள்.

இவர்கள் பிறர் செய்யும் வேலையைவிட, அதிகமாகவே செய்து முடிப்பார்கள்.

இவர்கள் தன் வாழ்நாளில் பல துன்பங்களை அனுபவிக்க நேரிடும். ஆனால், பணவசதியில் குறைவின்றி வாழ்வார்கள்.

இவர்கள் தன் வாழ்நாளில் பல நாட்களை தேச முன்னேற்ற வேலைகளில் செலவிடுவார்கள். இவர்கள் ஒரு தேசத் தொண்டர்களாக பணியாற்றுவார்கள்.

இவர்களுக்கு கல்வியறிவு ஓரளவுதான் கிடைக்கும்.

இவர்கள் நிலக்கரிச் சுரங்கம் சம்பந்தப்பட்ட வகையில் தொழில் முறை செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் வாழ்நாளின் முன்பகுதி இன்பதுன்பம் கலந்ததாகவும், 30 வயதிற்கு மேல் நிரந்தரமான வருமானத்துடன் எவ்விதக் கஷ்டமுமின்றி வாழக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு வயோதிக காலத்தில் பாரிசவாயுவினால் தொந்தரவு ஏற்படும்.

இந்த ரேகைதாரரின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகள் எவை, எந்த வகையான ஆடை, எந்த

வகையான இரத்தினக்கல் முன்னேற்றத்தைத் தரும் என்ற விபரத்தை இந்த புஸ்தகத்தின் கடைசிப் பக்கத்தில் காணலாம்.

## எண் 19

சி- ச- சு- சி- சு

பெருவிரலில் சரிவு ரேகையும், ஆள்காட்டி விரலில் சரிவு ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சரிவு ரேகையும், சுண்டு விரலில் சுற்று ரேகையும் தென்படுமானல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் எந்த வகையிலும் சுகமான ஜீவியம் நடத்தக்கூடியவர்களாகவே இருப்பார்கள். இவர்களுக்கு இரக்கமான குணம் இருக்கும். பிறரை வஞ்சிக்கமாட்டார்கள். பிறரை மனம் நோகப் பேச மாட்டார்கள்.

இவர்களுக்கு கல்வியறிவில் முன்னேற்றம் ஏற்படாது. ஓரளவுதான் கல்வி கற்க முடியும்.

இவர்கள் ஆரம்பத்தில் எழுத்துவேலை செய்பவர்களாக இருந்து பின்பகுதியில் வேறு வேலை பார்க்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் இயந்திர சம்பந்தமான சில புது சாதனங்களைக் கண்டுபிடிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இந்த ரேகை அமைப்புள்ள சிலர் கவிஞர்களாகவும் இருக்கின்றனர்.

இவர்களுக்கு ஒரே தொழிதான் அமையும் என்று கூறுவதற்கில்லை.



இதே ரேகை அமைப்பு உள்ள பலர், மின்சார சம்பந்தமான தொழில் முறை செய்கின்றனர். வியாபாரம் செய்கின்றனர். உணவு விடுதி வைத்து நடத்தி வருகின்றனர். சினிமா சம்பந்தமான தொழில் முறையில் ஈடுபட்டிருக்கின்றனர். புஸ்தகம் வெளியிடுபவர்களாகவும் இருக்கின்றனர். பாடகர்களாகவும் இருக்கின்றனர். இராணுவ சம்பந்தமான காரியங்களைக் கவனிக்கக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர்.

இவர்கள் ஆரம்ப முதல் 27 வயதிற்கு மேல் தொழில் முறையில் முன்னேற்றமடைந்து ஆயுள் வரை சுகமாக வாழக்கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்களுக்கு அடிக்கடி காய்ச்சல் வரும், குணமாகும் சில சமயம் டைபாயிட் காய்ச்சல் கூட வந்து குணமாகும். ஆனல், ஏதானும் மோசம் ஏற்படாது.

இந்த ரேகைதாரருடைய பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகளேயும் முன்னேற்றம் தரும் ஆடை, இரத்தினக்கல் எவை என்ற விபரத்தையும் இந்த புஸ்தகத்தின் கடைசிப் பக்கத்தில் காணலாம்.

## எண் 20

சி- ச- சு- சு- சு

பெருவிரலில் சரிவு ரேகையும், ஆள்காட்டி விரலில் சரிவு ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சுற்று ரேகையும், சுண்டு விரலில் சுற்று ரேகையும் தென்படுமானல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் முன்பகுதியில் கஷ்டப்பட்டு பின்பகுதியில் சுகமாக வாழக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் நல்ல உழைப்பாளிகளாக இருப்பார்கள். சாதாரண ஒரு மனிதன் செய்யும் வேலையை விட இவர்கள் மூன்று பங்கு அதிகமாக வேலை செய்வார்கள்.

இவர்கள் பல திட்டங்களை வகுப்பார்கள். ஆனால், அதை நிறைவேற்ற இவர்களால் முடியாது. அது தடைபட்டுப் போகும். இதன் காரணமாக இவர்கள் மன வேதனையடைவார்கள்.

இவர்கள் நல்ல யூகம் உள்ளவர்களாக இருப்பார்கள். எந்த ஒரு காரியத்தையும் நன்ருகச் சிந்தித்த பின்னரே செயல்படுவார்கள். பிறர் கூறும் யோசனை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், அதனால் பலனுண்டா என்பதையும் கவனிப்பார்கள்.

இவர்களுக்கு கல்வி விஷயத்தில் முன்னேற்றம் ஏற்படாது.

இவர்கள் தொழில் முறையிலும் கஷ்டமான நிலையே ஏற்படும். அதாவது கடின உழைப்பு இருக்கும்.

இவர்களுக்கு 24 வயது வரை எல்லாவகையிலும் முன்னேற்றம் ஏற்படாது. சிலவுக்குத் தேவையான வருமானம் கிடைக்காது. 27 வயதிற்கு மேல் ஒரு ஸ்திரமான தொழில் முறை அமையும். அதாவது ஒரு ஹோட்டலை நடத்தக் கூடிய நிலை ஏற்படும்.

35 வயதிற்கு மேல் சொந்தமாக ஒரு தொழில் முறை தொடரும். இது கட்டிடங்களைக் காண்ட்ராக்ட் எடுக்கும் ஒரு தொழில் முறையாக இருக்கும். அந்த வகையில் நல்ல வருமானம் கிடைக்கும்.



இந்த வகையில் 55 வயது வரை தொடர்ந்த வருமானம் கிடைத்துவரும். இடையில் எவ்வகையிலும் கஷ்டநஷ்ட மேற்படாது.

இவர்களுக்கு இருதய சம்பந்தமான சில வியாதிகள் தோன்றி குணமாகும். அபாயம் ஏற்படாது.

இந்த ரேகைதாரரின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகள் எவை, முன்னேற்றம்தரும் ஆடைகள், இரத்தினக் கற்கள் எவை என்பதை இந்தப் புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.

## எண் 21

சு- ச- சு- ச- ச

பெருவிரலில் சுற்று ரேகையும், ஆள்காட்டி விரலில் சரிவு ரேகையும் மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சரிவு ரேகையும், சுண்டு விரலில் சரிவு ரேகையும் தென்படுமானல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் ஒரு தனிப்பட்ட மனிதனுக வாழவே நினைப்பார்கள். இவர்கள் மிகவும் இரக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

பிறருக்கு உதவி செய்ய ஆர்வம் உள்ளவர்களாக இருப்பார்கள். யாருடனும் மரியாதை, அன்பு, பணிவுடன் பேசுவார்கள்.

இவர்களுக்கு உலக ஆடம்பர வாழ்க்கையே பிடிக்காது எந்த வகையிலும் அளவுடன் நடந்துக் கொள்ளவே விரும்புவார்கள்.

கல்வி விஷயத்தில் முன்னேற்றம் அடைய முடியாது. இருந்தாலும் தேவையான கல்வி அறிவு இருக்கும்.

இவர்கள் தொழில் முறையில் கடின உழைப்பு இருக்காது. சுலபமான வகையில் வருமானம் அடையக் கூடியவர்களாகவே இருப்பார்கள்.

தொழில் முறை ஆரம்ப முதல் ஒரு நல்ல முன்னேற்றம் இருக்காது. இவர்களுக்கு 25 வயது வரையிலும் தொழில் முறையில் நல்ல வருமானம் கிடைக்காது.

இவர்கள், இரசாயன சாலையில் ஆராய்ச்சிக் கூடத்தில் வேலைபார்ப்பவராகவும், அறிவிப்பாளராகவும், இருப்பார்கள்.

இவர்கள் சர்க்கார் சம்பந்தமான எந்த ஒரு ஸ்தாபனத்திலும் வேலை செய்ய முடியாது.

இவர்களின் 30 வயது முதல் தொழில் முறையில் முன்னேற்றம் ஆரம்பமாகும். அது முதல் தொடர்ந்த வருமானம் பிடைத்துவரும். ஆயுள்வரை சுகமான ஜீவியம் நடைபெறும்.

இவர்களுக்கு கண், ஈரல் சம்பந்தமான வியாதிகள் தோன்றும். ஆனால், குணமாகிவிடும். எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டார்.

இந்த ரேகைதாரருடைய பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதி, முன்னேற்றம் தரும் ஆடை, இரத்தினக் கல் இவைகளின் விபரங்களை இந்த புஸ்தகத்தின் கடைசியில் காணலாம்.



# எண்-22

சு-ச-சு-சு-ச

பெருவிரலில் சுற்று ரேகையும், ஆள் காட்டி விரலில் சரிவு ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சுற்று ரேகையும், சுண்டு விரலில் சரிவு ரேகையும் தென்படுமானால், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் ரொம்பவும் அமைதியானவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் பிறருடன் அன்பாகப் பேசுவார்கள். நயமாகப் பழகுவார்கள். அதன் காரணமாக இவர்களுக்கு அநேக நண்பர்கள் இருப்பார்கள்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் ஒரு தனிப்பட்ட வசீகரத் தன்மை பெற்றவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் சத்தியத்திற்கும் நீதிக்கும் கட்டுப்பட்டவர்கள். மன சாட்சிக்கு விரோதமாக நடக்க மாட்டார்கள். பொதுவாக இவர்களை மற்றவர்கள் நல்லவர்கள் என்றே கூறுவார்கள்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்களின் தொழில் முறை ஒன்றுபோலிருக்காது. சிலர் பொரியியல் வல்லுனராகவும் இருக்கின்றனர். சிலர் தச்சு வேலை செய்பவர்களாகவும், சிலர் சமையல் வேலை செய்பவர்களாகவும் இருக்கின்றனர்.

இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் எந்தத் தொழில் முறையிலும் தேர்ச்சி பெற்றவர்களாகவே இருப்பார்கள்.

இவர்களுக்கு சர்க்கார் சம்பந்தமான வேலை கிடைத்தாலும் அதில் இவர்கள் நீடித்து இருக்க முடியாது.

இந்த ரேகைதாரர்கள் 30 வயது வரை குறைந்த வருமானத்துடன் தான் வாழ வேண்டிவரும்.

31 வயது முதல் வருமானம் உயர ஆரம்பிக்கும். 35, 45, 55, வயதுகளில் நல்ல வருமானத்துடன் வசதியாக வாழ்வார்கள்.

இவர்களுக்குக் கடுமையான எந்த நோயும் உண்டாகாது. ஆயுள்வரை சுகமாக வாழ்வார்கள்.

இந்த ரேகை தாரரின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகள் எவை, எந்த விதமான ஆடை, எந்த வகையான இரத்தினக்கல் அணிந்தால் இவர் முன்னேற்ற மடையலாம் என்ற விபரத்தை இந்த புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.

## என்—23

சு-ச-சு-ச-சு

பெருவிரலில் சுற்று ரேகையும், ஆள்காட்டி விரலில் சரிவு ரேகையும், மூன்றுவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சரிவு ரேகையும், சுண்டு விரலில் சுற்று ரேகையும் தென்பட்டால், இந்த ரேகை அமைப்பு உள்ளவர், கல்வி விஷயத்தில் முன்னேற்றமடையக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் பெருந்தன்மை வாய்ந்தவர்களாக இருப்பார்கள். இவர்கள் ஈவு இரக்கம் உள்ளவர்களாகவும், பிறருக்கு உபகாரம் செய்யக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.



பிறரை வஞ்சிக்க எண்ணமாட்டார்கள். பிறர்மீது பொருமைப்படமாட்டார்கள். தன்னைப்போல பிறரும் வாழ வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்டவர்களாகவே இருப்பார்கள்.

இவர்கள் தங்கள் வேலை விஷயத்தில் கண்டிப்புள்ளவர்களாகவும், அக்கரை உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

எடுத்த காரியத்தை, மேற்கொண்ட வேலையை நல்ல முறையிலே கூடுமானவரை துரிதமாகவே செய்து முடிக்க வேண்டுமென்ற எண்ணமுள்ளவர்களாகவே இருப்பார்கள்.

ஆனால், இவர்கள் தொழில் முறை ஒரே விதமாக நீடித்து நடைபெருது. இடை இடையே துண்டித்து விடும். ஆனால், அது நன்மையாகவே முடியும். வருமானத்தையும் உயர்த்தும்.

இவர்கள் வேலை செய்யுமிடத்தில் இவரைத் திடீரென விலக்கி விடுவார்கள். ஆனால், அதே நேரத்திலே இவருக்கு வேறொரு இடத்தில் இதைவிட உயர்ந்த வேலையொன்று அதிக சம்பளத்துடன் காத்துக் கொண்டிருக்கும்

இந்த விதமாகவே இவர்களுக்கு 45 வயது ஆகுமுன் பல இடம் மாறி மாறி உயர்ந்த வருமானத்தைப் பெற்று வருவார்கள்.

46 வயது முதல் ஒரு இடத்திலேத்து நீடிக்கும் அங்கு 56 வயதுவரை தொழில் முறையில் தொடர்ந்த வருமானம் கிடைத்துவரும்.

இவர்களுக்கு கட்டிட வரைபடம் வரைதல், கட்டிடங்களுக்குத் தேவையான பொருள்களை சப்ளை செய்வது போன்ற தொழில் முறை அமையும்.

இதே ரேகை அமைப்புள்ள சிலர் பொரியியல் வல்லுனர் அதாவது மெக்கானிக்கல் எஞ்ஜினீயராகவும் இருக்கின்றனர்.

இதோடு சிலர் சில தொழில் சங்கங்களுக்குத் தலைவராகவும் இருக்கின்றனர்.

இவர்களின் வாழ்நாளில் முன் பகுதி சுகமற்றதாகவும் பின் பகுதி வசதியானதாகவும் இருக்கும்.

இவர்களுக்கு எவ்விதமான நோயும் உண்டாகாது. வயோதிக காலத்தில் நரம்பு சம்பந்தமான நோய் ஏற்பட்டு பாதித்து குணமாகும். பயமில்லை.

இந்த ரேகைதாரருடைய பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதிகளையும், எந்த விதமான ஆடை இரத்தினக்கல் முன்னேற்றத்தைத் தரும் என்ற விபரத்தையும் இந்த புஸ்தகத்தின் கடைசி பக்கத்தில் காணலாம்.

## எண்-24

### சு-ச-சு-சு-சு

பெருவிரலில் சுற்று ரேகையும், ஆள்காட்டி விரலில் சரிவு ரேகையும் மூன்ருவது விரலில் சுற்று ரேகையும் நான்காவது விரலில் சுற்று ரேகையும் சுண்டு விரலில் சுற்று ரேகையும் தென்படுமானல் இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் எப்பொழுதும் வசதியாக



வாழக் கூடியவர்களாக இருப்பார்கள். இவர்கள் வசீகரம் பெற்றவர்களாக இருப்பார். பிறர் இவர்களைக் கண்டு மயங்கக் கூடிய நிலையில் இருப்பார்கள். இவர்கள் இராஜரீகமாக வாழக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்களுக்கு அதிக நண்பர்கள் இருக்க மாட்டார்கள். இவர்கள் பிறந்தது முதலே செல்வத்துடன் வாழ்வார்கள். ஆரம்ப முதல் கடைசி வரை ஒரே சீரான வாழ்க்கை நடைபெற்று வரும்.

இவர்கள் மனம் இரக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். பிறருக்கு உதவி செய்வார்கள்.

இவர்கள் எப்பொழுதும் குடும்பப் பற்றுள்ளவர்களாக இருந்து வருவார்கள்.

இவர்கள் சில சமயம் கடின மனமுள்ளவர்களாக இருப்பார்கள். சில சமயங்களில் இளகிய மனதுள்ளவர்களாக இருப்பார்கள்.

இவர்களது மனது அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கும். சிலசமயம் மற்றவர்களைப் பற்றி உயர்வாகப் பேசுவார்கள். வேருெரு சமயம் அவர்களை மிகவும் தாழ்வாகப் பேசுவார்கள்.

சில சமயம் மற்றவர்கள் பேச்சுகளை முழுவதும் நம்பி விடுவார்கள். சில சமயம் எவ்வளவுதான் வற்புறுத்தினலும் அது உண்மையாக இருந்தாலும் கூட அந்த விஷயத்தை நம்பவேமாட்டார்கள்.

எவ்வளவு வசதியோடு வாழ்ந்தாலும், 30 வயது வரை பலவகையான கஷ்ட நஷ்டங்களையும் அநுபவிக்க வேண்டியதாயிருக்கும். ஆனல் வயதான காலத்தில் சகல வசதியுடன் வாழ்வார்கள்.

சிவர்களுக்கு எந்த விதமான தொழிலும் இருக்காது. டணவசதி காரணமாக தொழில் முறை தேடவேண்டிய தேவையிருக்காது.

இவர்களுக்கு எவ்வித நோயும் வராது. வயது காலத்தில் கூட நரம்புகள் வலிவுடனிருக்கும். நிமிர்ந்து நடப்பார்கள்.

எனவே, இவர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கான வழி வகைகளை தேட வேண்டியதில்லை.

## எண்-25

ச-சு-சு-ச-ச

பெருவிரலில் சரிவு ரேகையும், ஆள்காட்டிவிரலில் சுற்று ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சரிவு ரேகையும் சுண்டு விரலில் சரிவு ரேகையும் தென்படுமானல் இந்த ரேகை அமைப்பு உள்ளவர், இவர்கள் தங்கள் வாழ்நாளில் முன் பகுதியை பிறர் உதவி கொண்டு கடக்கவேண்டும். பின் பகுதியில் வசதியாக வாழ முடியும்.

இவர்கள் கபடு, சூது, வாது அறியாதவர்களாக இருப்பார்கள். எந்த ஒரு இரகசியத்தையும் கூட, அதனல் விளையும் பலன் எப்படியிருக்கும் என்பதை யோசிக்காது பிறரிடம் கூறிவிடுவார்கள்.

இவர்கள் இரக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். பிறர் மனம் நோகும்படி எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டார்கள்.

இவர்கள் பண விஷயத்தில் வெகு எச்சரிக்கையாக இருப்பார்கள். இவர்கள் பிறருக்கு கடன் கொடுக்க



மாட்டார்கள். கொடுத்தாலும் அவர்களைக் கடிந்து கேட்கமாட்டார்கள்.

இவர்களுக்கு குறிப்பிட்ட எந்த ஒரு தொழிலும் இருக்காது. இவர்களுக்கு 32-வயது ஆகும் வரை பல தொழில் செய்ய வேண்டியிருக்கும். பிறர் உதவியை எதிர்பார்த்தே வாழவேண்டியிருக்கும்.

33 வயதிற்கு மேல் இவர்களுக்கு ஒரு நிலையான தொழில் முறை அமையும். இது உடலை உழைத்துக் கஷ்டப்படக்கூடிய தொழிலாக இருக்காது. சுபலமான முறையில் வருமானம் அடையக் கூடியதாகவே இருக்கும்.

34 முதல் 55 வயது வரையிலும் எவ்விதக் கஷ்டமுமின்றி சுகமான ஜீவியம் நடைபெறும். இவர்கள் தொழில் முறை சம்பந்தமாக பலஇடம் மாறக்கூடிய நிலை ஏற்படும்.

இவர்கள் வயோதிக காலத்தில் எவ்விதமான கஷ்டமுமின்றி சுகமாக வாழ்வார்கள்.

இவர்களுக்கு மூச்சு தொண்டை சம்மந்தமான வியாதிகள் தோன்றி குணமாகும். கெடுதல் ஏற்படாது.

இவர்கள் பெயருக்கு ஏற்ற முன்னேற்றம் தரும் தேதி, எண், அணியும் ஆடை, இரத்தினக்கல் எவை என்பதை இந்த புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.

## எண்-26

ச-சு-சு-சு-ச

பெருவிரலில் சரிவு ரேகையும், ஆள் காட்டிவிரலில் சுற்று ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சுற்று ரேகையும், சுண்டு விரலில் சரிவு ரேகையும் இருக்குமாளுல் இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் மன இரக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

இவர்களுக்கு கல்வி விஷயத்தில் முன்னேற்றம் இருக்காது. பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் உள்ளவர்களாகவே இருப்பார்கள்.

இவர்கள் தங்கள் தொழில் முறையில் 25 வயது வரை முன்னேற்றமடையவே முடியாது.

இவர்கள் தொழில் முறைகூட கஷ்டப்பட்டு உழைக்கக் கூடியதாக இருக்காது. எழுத்து வேலை, கேளிப்படம் வரைதல் இந்த வகையில் பண வருமானம் கிடைத்துவரும்.

இவர்களுக்கு 32 வயதிற்கு மேல் தொழில் முறை பயிற்சியளிக்கும் ஒரு தொழில் முறை தொடரும். இந்த வகையில் 12 வருடங்கள் வரை அதாவது 44 வயது வரை வாழ்க்கை நடைபெறும்.

இவர்களுக்கு 45 வயது முதல் தனிப்பட்ட ஒரு தொழில் முறை தொடரும். இது ஒரு வியாபார சம்பந்தப்பட்டதாக இருக்கும். இது ஜவுளி, காகிதம், சணல், பட்டு, கம்பளி இவை போன்ற பொருள்களாக இருக்கும்.



இந்த வகையில் 57 வயது வரை நல்ல வருமானம் கிடைக்கும். இந்த வயதுகளில் வீடு, நிலம் சேரும். மனசந்தோஷகரமான வாழ்க்கை நடைபெறும்.

இவர்களுக்கு உடல் அடிக்கடி நடுமுதுகில் வலி ஏற்படும். வயிற்றுவலி உண்டாகும். சிறுநீர் சம்பந்த மான சில தொந்தரவுகளும் ஏற்பட்டுக் குணமாகும். ஆனுல் நெடுகிலும் நீண்ட நாள் பாதிக்காது.

இந்த ரேகைதாரர்களின் பெயருக்கு ஏற்ற வெற்றி தரும் தேதி எது? முன்னேற்றம் தரும் ஆடை எது? இரத்தினக்கல் எவை என்பதை இந்தப் புஸ்தகத்தின் கடைசிப் பக்கம் காணலாம்.

## எண்-27

ச-சு-சு-ச-சு

பெருவிரலில் சரிவு ரேகையும், ஆள்காட்டி விரலில் சுற்று ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சரிவு ரேகையும், சுண்டு விரலில் சுற்று ரேகையும் தென்படுமானுல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் மனோ தைரியம் உள்ளவர் களாகவே இருப்பார்கள்.

எந்த ஒரு காரியத்தையும் துணிந்து செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். இவர்கள் கல்வி விஷயத்தில் மேல் போக முடியாது.

இவர்கள் தேசப் பாதுகாப்புக்காகவே பிறந்தவர் கள். இவர்கள் தொழில் முறை ராணுவ சம்பந்தப் பட்டதாகவே இருக்கும்.

இவர்கள் 22 வயது முதலே அரசாங்க சம்பந்தப்பட்ட ஒரு தொழில் முறையில் சேர்ந்து அதினின்றும் இராணுவ சம்பந்தமான இலாக்காவிற்கு மாற்றப்பட்டு, 26 வயது முதல் இராணுவத்தில் பணிபுரிய ஆரம்பிப்பார்கள்.

இந்த வகையில் படிப்படியாக உயர்வு ஏற்படும். 33 வது வயதில் ஒரு உயர்தர அதிகாரியாக மாறுவார்.

இவர் பிறந்த ஊரில் வசிக்கவே முடியாது. எந்தக் காலத்திலும் தன் வாழ்நாள் முழுவதும் வெளியூர், அதுவும் காடுமலை போன்ற பிரதேசங்களிலேயே வாழ வேண்டி வரும்.

சில சமயங்கள் பல பெரிய வெடி விபத்தின்றும் அதிசயமாக உயிர் தப்புவார்.

இவருக்கு 57 வயதாகும் பொழுதுதான் ஓய்வு கிடைக்கும். இந்த சமயம் கொஞ்சம் அதிக தொகை கூட கைக்கு வரும்.

58 வது வயது முதல் ஒரு கிராமத்தில் வாசம் ஆரம்பமாகும். கிராம வாழ்க்கையில் வீடு, நிலங்களுடன் சுகமாக வாழ்வார்.

இவருக்கு ஆயுள் வரை எவ்வகையிலும் உடல் நலம் பாதிக்காது. சில சமயங்களில் சிறு நீர் சம்பந்தமான சில வியாதிகள் தோன்றி குணமாகும்.

சில சமயங்களில் மூளைக்கோளாறு ஏற்பட்டு சில நாட்களில் குணமாகும். எவ்வித அபாயமும் ஏற்படாது



## எண்-28

### ச-சு-சு-சு-சு

பெருவிரலில் சரிவு ரேகையும், ஆள்காட்டி விரலில் சுற்று ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சுற்று ரேகையும், சுண்டு விரலில் சுற்று ரேகையும் தென்படுமானல் இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் நல்ல உழைப்பாளிகளாகவே இருப்பார்கள்.

இவர்கள் பிறர் தயவை எதிர்பார்க்க மாட்டார்கள். இவர்கள் எந்தத் தொழில் முறையிலும் முன்னேற்றம் அடையக் கூடியவர்களாக இருந்தாலும் பிறருக்கு அடிமையாக வாழவே மாட்டார்கள்.

இவர்களைச் சுற்றிப் பலர் சூழ்ந்து, இவர்கள் சொல்லும் வேலைகளைச் செய்யத் தயாராக இருப்பார்கள்.

இவர்கள் தங்களிடம் வேலை செய்யும் மக்களுக்கும் மனங்கோணுது திருப்தியான வகையில் ஊதியம் அளிப்பார்கள்.

இவர்கள் உழைப்பின் அருமையை அறிந்தவர்களாகவே இருப்பார்கள்.

இவர்கள் பாழடைந்த கட்டிடங்களை வாங்கி அதைப் புதுப்பித்து நல்ல விலைக்கு விற்றுவிடுவார்கள். வெறும் பூமியை வாங்கி அதில் அழகிய கட்டிடம் எழுப்பி அதை விற்றுவிடுவார்கள். இந்த வகையில் மிகுந்த சாமார்த்திய சாலிகளாக இருப்பார்கள்.

இவர்களிடம் மூலதனம் இருக்காது. பிறரிடம் சாமார்த்தியமாகப் பணம்வாங்கி தன் திட்டத்தை நிறைவேற்றி, நல்ல லாபத்தை அடைவதோடு, வாங்கிய

பணத்தையும், சொன்னது போல கொடுத்து விடுவார்கள்.

இவர்களுக்கு 25 வயது வரை எந்த வகையிலும் ஒரு நல்ல தொழில் முறை கிடைக்காது. தேவையான வருமானமும் கிடைக்காது.

26 வயது முதல் நிலைமை மாறும். ஒரு கட்டிட கான்ட்ராக்டரிடம் வேலைக்கு அமர்ந்து, அவரிட மிருந்தே தொழிற் நுட்பங்களை அறிந்து, பிறகு தனியே தொழில் முறை ஆரம்பிப்பார்கள்.

27 வயது முதல் 38 வயது வரையிலும், 39 முதல் 41 வயது வரை நல்ல வருமானம் கிடைக்கும்.

42 முதல் 54 வயதிற்குள்ளாக பணம் நிறைய மிச்சப்படும். அது முதல் ஆயுள் வரை எவ்விதக் கஷ்டமுமின்றி சுகமாக வாழ்வார்கள்.

இவர்களுக்கு வயோதிக காலத்தில் பாரிசவாயு ஏற்படும். அதனுல் கஷ்டப்படுவார்கள்.

## எண்-29

சு-சு-சு-ச-ச

பெருவிரலில் சுற்று ரேகையும், ஆள் காட்டி விரலில் சுற்று ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சரிவு ரேகையும், சுண்டு விரலில் சரிவு தென்படுமானுல் இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் பொதுமக்களால் போற்றக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்களுக்கு கல்வி விஷயத்தில் நல்ல முன் னேற்றம் இருக்கும். கல்வியுடன், யூகமான அறிவும் பெற்றவர்களாக இருப்பார்கள்.



[illegible] சாதாரணமான கீழ்த்தரமான அடிமை [illegible] செய்யக்கூடியவர்களல்ல இவர்கள் பெரிய உத்தி [illegible]தர்களாகவோ, உயர்தர அதிகாரிகளாகவோ [illegible] இருப்பார்கள்.

இவர்கள் மனே தைரியம் உள்ளவர்களாக இருப் பார்கள். எந்தக் காரியத்திலும் தோல்வியடைய மாட்டார்கள்.

இவர்கள் பிறர் கஷ்டமறிந்து சமயத்திற்குத் தக்க உதவி செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்களுக்கு தன் தொழில் முறையிலும், குடும்பத் திலும், அடிக்கடி ஏதாவது சில சங்கடம் ஏற்பட்டு விலகும். 'அதற்காக இவர்கள் மனங் கலங்கமாட்டார் கள். தங்கள் வாழ்நாளில் தங்களை எவரும் வெறுக்கக் கூடாத நிலையில் மக்களுடன் கலந்து வாழ்வார்கள்.

இவர்கள் உயர்தர பதவியில் இருந்தாலும் கூட, சங்கீதம், சித்திரக்கலை, இவைகளில் தேர்ச்சிபெற்ற வர்களாக இருப்பார்கள்.

இவர்கள் தெய்வபக்தியுள்ளவர்களாக இருப் பார்கள்.

வ்யோதிக காலத்தில் இவர்கள் மத சம்பந்தமான விஷயங்களை பிறருக்குப் போதித்து, அவர்களை நல் வழிக்குத் திருப்ப பிரயாசை எடுப்பார்கள்.

இவர்களுக்கு ஆரம்ப வயதுகளில் அதாவது 22 வயது வரை எந்தவகையிலும் முன்னேற்றம் இருக்காது.

23, 25, 27 வயதுகளில் எதிர்பாராத வகையில் தொழில் முறை உயர்வடையும்.

28 முதல் 40 வயது வரையிலும் நல்ல யோகம் உண்டு. நல்ல வருமானம் கிடைக்கும். 41 முதல்

58 வரையிலும் வீடு, நிலம், மற்றும் வசதி ஏற்படும். சுகமாக வாழ்வார்கள்.

இவர்களுக்கு வயது காலத்தில் நரம்புகள் தளர்ச்சி யடையும். 60-க்கு மேல் நடை தளரும். வீட்டில் வசதி யாக இருக்கவேண்டி வரும். வேறு வகையில் எவ்விதக் கஷ்டமும் ஏற்படாது.

## எண்-30

சு-சு-சு-சு-ச

பெரு விரலில் சுற்று ரேகையும், ஆள்காட்டி விரலில் சுற்று ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சுற்று ரேகையும், சுண்டு விரலில் சரிவு ரேகையும் தென்படுமானல் இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் பிறருடன் அன்புடன் பழகக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்களுக்கு கல்வி விஷயத்தில் முன்னேற்றம் இருக்காது.

தொழில் முறையில் கூட கொஞ்சம் கஷ்டமான உழைப்பு தான் இருக்கும். ஆனல் பின் பகுதியில் மாறிவிடும்.

இவர்கள் நன்ருக உழைக்கக் கூடியவர்கள். தங்கள் எஜமானர்களை ஏமாற்றமாட்டார்கள். தங்கள் முதலாளியின் முன்னேற்றத்திற்குப் பாடுபடக்கூடியவர் களாக இருப்பார்கள்.

இவர்கள் உழைப்புக்கு ஏற்றபடி நல்ல வருமானம் கிடைத்துவரும். வேகமாகப் பணத்தைச் சேர்ப் பார்கள். ஆனல், பெண் விஷயமாக சில நாட்களில் பணத்தை இழந்து வருந்துவார்கள்.



இவர்கள் எப்பொழுதும் மன உற்சாகத்துடன் இருப்பார்கள். ஆனல் இவர்களுக்கு 26 வயதிற்கு மேல் தான் தொழில் முன்னேற்றம் ஏற்படும்.

இவர்களுக்கு 38 வயது வரை படிப்படியாக வருமானம் உயரும். நல்ல வசதியுடன் சுகமாக வாழ் வார்கள். ஆனல் 39க்கு மேல் 49 வயது வரை ஒரு பத்து வருட காலம் இவர்களுக்கு பெரும் சோதனை காலமாக இருக்கும். சம்பாதித்த பொருள் எல்லாம் விரயமாகும். பல வகையிலும் மனசங்கடம் உண்டாகும்.

50வது வயது முதல் நிலைமை மாறும். ஆரம்ப கால கட்டம் போல தொழில் முறையில் முன்னேற்றமும் வருமானமும் கிடைத்துவரும். பழயபடி பணம் சேரும். எல்லா வசதியும் ஏற்படும். அது முதல் 60 வயதுவரை எவ்விதக் கஷ்டமுமின்றி சுகமாக வாழ்வார்கள்.

இவர்களுக்கு பல் சம்பந்தமான சில நோய்கள் ஏற்பட்டு குணமாகும். இவர்களுக்கு பாதங்களிலும் குதிகாலிலும் பித்த வெடிப்புகள் ஏற்பட்டு கஷ்டப் படுத்தும். ஆனல், நீடித்து தொல்லை தராது.

இந்த ரேகைதாரர்களுடைய பெயருக்கு ஏற்ற வெற்றிதரும் தேதிகளும் அணிய வேண்டிய ஆடை, இரத்திணக்கல் இவைகளின் விபரங்களையும் இந்தப் புஸ்தகத்தின் கடைசிப் பக்கத்தில் காணலாம்.

## எண்-31

சு-சு-சு-ச-சு

பெரு விரலில் சுற்று ரேகையும், ஆள் காட்டி விரலில் சுற்று ரேகையும், மூன்ருவது விரலில் சுற்று ரேகையும், நான்காவது விரலில் சரிவு ரேகையும் சுண்டு விரலில் சுற்று ரேகையும் தென்படுமானல் இந்த

ரேகை அமைப்பு உள்ளவர்கள் கல்வி விஷயத்தில் முன்னேற்றம் அடையக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் எல்லா நற்குணங்களும் பெற்றிருப்பார்கள். பிறருடன் அன்பாகப் பேசும் குணமுள்ளவராக இருப்பார்கள்.

இவர்கள் நன்ருக உழைக்கக் கூடியவர்களாகவும் எஜமான விசுவாசம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்களுக்கு உ...ர்காக்கும் நண்பர்கள் பலர் இருப்பார்கள்.

இவர் நல்ல யூகம் உள்ளவர்களாக இருப்பார்கள். இவர்கள் தங்கள் தொழில் முறையில் முன்னேறுவதைக் கண்ட பிறர் பொருமைப்பட வேண்டி இருக்கும்.

இவர்களுக்கு ஆரம்பத்தில் சர்க்கார் சம்பந்தப்பட்ட வேலையே தொடரும். வர வர உயர்வடைந்து, நல்ல பெயரும் பெற்று சந்தோஷமாக வாழ்வார்கள்.

31 வயது முதல் தொழில் முறை மாறும். பல நண்பர்களுடன் கூட்டுச் சேர்ந்து, ஒரு வியாபார சம்பந்தமான தொழில் முறையில் இறங்குவார்கள்.

அதன் காரணமாக நல்ல வருமானம் கிடைக்கும். பணம் மிச்சப்படும்.

32 முதல் 44 வயது வரை 12 வருட காலம் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சகல வசதியுடன் சுகமாக வாழ்வார்கள்.

45 வயது முதல் தொழில் முறையில் ஒரு மாற்றம் ஏற்படும். நண்பர்கள் கூட்டு வியாபாரம் தவிர வேறு வகையில் தனிப்பட்ட ஒரு வியாபாரம் தொடரும். இது



லோக சம்பந்தப்பட்டதாக இருக்கும். அது முதல் 57 வயது வரையிலும் நல்ல வருமானம் கிடைக்கும். நல்ல வசதியுடன் வாழ்வார்கள்.

இவர்களுக்கு சிறுநீர் சம்பந்தமான சில வியாதிகள் தோன்றி குணமாகும். வயோதிக காலத்தில் மூல ரோகம் ஏற்படும். ஆனுல், அதிக கஷ்டம் கொடுக்காது.

## எண்-32

சு-சு-சு-சு-சு

பெருவிரலில் சுற்று ரேகையும் அதே போல மற்ற நான்கு விரல்களிலும் சுற்று ரேகை தென்படுமானுல், இந்த ரேகை அமைப்பு உள்ளவர்கள் கல்வி விஷயத்தில் மேல் போக முடியாது.

இவர்கள் வீண் பேச்சு பேசுகிறவர்களாகவும், வேலையில் பற்றுகொள்ளக் கூடாதவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்களுக்கு தெய்வ பக்தியிருக்காது. இவர்கள் எந்த ஒரு காரியத்தையும் முன்பின் யோசியாமல் செய்வார்கள். தானே பெரியவன் என்ற மமதையுடன் நடப்பார்கள். பிறர் கூறும் யோசனைகளை ஏற்க மாட்டார்கள்.

இவர்கள் தொழில் முறை கூட கடினமானதாகவே இருக்கும்.

இவர்கள் எந்தத் தொழில் முறையையும் ஒழுங்காகக் கற்று, அதன் மூலம் வருமானம் அடைய மாட்டார்கள்.

இவர்கள் பல தொழில் கற்று எதிலும் நீடித்து நிலைக்கமாட்டார்கள்.

ஆனால், பிறரை மயக்கும் சூட்சம சக்தி பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்கள் கூறுவதை பிறர் நம்பி விடுவார்கள்.

இவர்களுக்கு அதிக நண்பர்கள் இருக்கமாட்டார்கள். இவர்கள் கைத்தொழில் செய்வார்கள். வியாபாரம் செய்வார். சோதிட சம்பந்தமான சில காரியங்களில் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பார்.

இவர்களுக்கு நிலையான தொழில் இல்லாத காரணத்தால் 24 வயது வரை எதிலும் முன்னேற்றமடைய மாட்டார்கள். இவர்கள் எந்தத் தொழில் செய்தாலும் 39 முதல் 48 வயது வரை நல்லவருமானம் கிடைக்கும் அந்த சமயம் இவர்கள் பணத்தை சேமிக்க முடியாது. வீண் வகையில் செலவு செய்துவிடுவார்கள்.

49 வயது முதல், எழுத்து வேலை, க... சம்பந்தமான வியாபாரம், புஸ்தக சம்பந்த தொழில் முறை இவைகளினால் வருமானம் கிடைக்கும்.

58 வயதுக்கு மேல் 67 வயது வரை வியாபார சம்பந்தமான ஒரு வகையில் நல்ல வருமானம் கிடைக்கும். இந்த வயதுகளில் பணம் மிச்சமாகும் எல்லா வசதியுடன் சுகமாக வாழ்வார்கள்.

இவர்களுக்கு வாயு சம்பந்தமான சில சங்கடங்கள் ஏற்பட்டு விலகும். வயோதிக காலத்தில் மூல சம்பந்தமான நோய் ஏற்பட்டு பாதிக்கும். ஆனால் கஷ்டத்தைக் கொடுக்காது.

— முற்றும் —